பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 18 திங்கட்கிழமை (02-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:187

## முட்டுக்கட்டை நிலையை நீக்கும் விதத்தில்

# புலிகளுக்கு விளக்கக் கடிதம் பிரதமர் விரைவில் அனுப்புவார்!

## அமைச்சர்கள், உதவியாளர்களுடன் அவர் தொடர்ந்து மந்திராலோசனை

கொழும்பு,ஜூன்2

**இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ கூட்டம் நடைபெற இன்னும் ஒரு வாரமே இருக்கும் நிலையில் அக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளையும் பங்குபற்றச் செய்யும் முயற்சியை அரசு இன்னமும் கைவிடவில்லை என்று கூறப்படுகின்றது. இம்முயற்சியின் மற்றொரு நடவடிக்கையாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கக் கடிதம் ஒன்றை இன்று அல்லது நாளை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பவிருக்கிறார்.**

அரசு முன்வைத்த வடக்கு - கிழக்கு அபிவிருத்திக் கவுன்சில் யோசனையை நிராகரித்து விடுதலைப் புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை பிரதமருக்கு கடிதம் அனுப்பியிருந்தனர். அக் கடிதத்தில் புலிகள் சுட்டிக்காட்டியிருக்கும் குறைபாடுகள் தொடர்பாகவே பிரதமர் விளக்கக் கடிதமொன்றை அனுப்பவிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

புலிகளுக்கு அனுப்பப்படும் விளக்கக் கடிதம் குறித்து சிரேஷ்ட அமைச்சர்களுடனும் தனது அலுவலக உயர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் நாவற்குடாவில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,ஜூன்2

மட்டக்களப்பில் நேற்று முன்னிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியானார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) உறுப்பினர் காளிதாஸ் ரமணன் (வயது 36) என்பவரே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியானவராவார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

நேற்று இரவு 8.30 மணியளவில் மட்டு. நாவற்குடாப் பகுதியில் வைத்து இனந்த தெரியாத நபர்களினால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காளிதாஸ் ரமணன் ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி. கட்சிகளிலும் அங்கம் வகித்தவராவார். இவர் கடந்த பொதுத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) சார்பில் வேட்பாளராகப் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-3-12)

### புலிகளின் கோரிக்கையை நிராகரித்தமை:

## கூட்டமைப்பு எம்.பிக்கள் புதனன்று கூடி ஆராய்வர்

கொழும்பு,ஜூன்2

வடக்கு - கிழக்குக்கான புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குமாறு விடுதலைப் புலிகள் முன்வைத்த யோசனையை அரசு நிராகரித்தமை தொடர்பாக ஆராய்வதற்காக தமிழ்க் கூட்டமைப்பு நாளைமறுதினம் புதன்கிழமை கூடவிருக்கின்றது.

கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையகத்தில், கூட்டமைப்பின் இணைப்பாளர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டில் படைக்குறைப்பு விரைவில் என்கிறார் ராணுவ அதிகாரி

### 40 ஆயிரம் துருப்புகள் பத்தாயிரமாகக் குறைக்கப்படுமாம்

யாழ்ப்பாணம்,ஜூன்2

குடாநாட்டில் தற்சமயம் நிலவும் சமாதான சூழ்நிலை நீடிக்கும் பட்சத்தில் இங்கு நிலைகொண்டுள்ள சுமார் 40 ஆயிரம் துருப்புக்களையும் 10 ஆயிரமாகக் குறைக்க முடிவு செய்துள்ளோம். அந்த இலக்கை நோக்கி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

- இப்படிக் கூறினார் இராணுவத்தின் யாழ்மாவட்ட பொதுமக்கள் உறவுகள் அதிகாரி கேணல் எம்.ஜி.ரத்னாயக்க.

குடாநாட்டில் மக்கள் மீளக்குடியமர்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணிக்காக

(14ஆம் பக்கம் பார்க்க)

### வல்வெட்டித்துறை கடற்பகுதியில்

## இரட்டை இயந்திரம் பூட்டி மீன்பிடிக்க தடைவிதிப்பு

வடமராட்சி,ஜூன்2

வல்வெட்டித்துறை கடல்பகுதியில் இரட்டை இயந்திரம் பூட்டிய படகில் சென்று மீன்பிடிக்க மீனவர்களுக்கு படையினர் தடை விதித்துள்ளனர்.

வடமராட்சி கடல் பகுதியில் தலா எட்டு குதிரை வலு கொண்ட எஞ்சின்களைப்பூட்டி படகில் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி ஆகிய இடங்களில் உள்ள கடற்பகுதிக்குச் சென்று மீன்பிடிக்கும் இப்பகுதி மீனவர்கள், ஒற்றை

(14ஆம் பக்கம் பார்க்க)

## வல்வை சிதம்பரா மைதானம் அருகே படைமுகாம் அமைப்பதற்கு எதிர்ப்பு!

### இன்று காலை அங்கு கடையடைப்பு, மறியல்

வல்வை சிதம்பராக் கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கு அருகில் புதிதாகப் படைமுகாம் அமைக்க எடுக்கப்படும் முயற்சியை நிறுத்தக் கோரி அங்கு இன்று காலை அடையாள மறியல் போராட்டமும் பூரண கடையடைப்பும் இடம்பெறவுள்ளன.

இந்தப் போராட்டத்தை நேற்று அங்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் இறுதி நேரத்தில் அந்த ஏற்பாடு கைவிடப்பட்டது. போராட்டத்தை இன்று நடத்த ஏற்பாடாகியிருக்கிறது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## சு.க. - ஜே.வி.பி. கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்தாவது காலதாமதம்

கொழும்பு,ஜூன்2

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதில் மேலும் காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் எப்போது கைச்சாத்திடப்படுமென ஜே.வி.பி. ஊடகப் பேச்சாளரிடம் நேற்று கேட்டபோது இது குறித்து இன்னும் இறுதி முடிவு செய்யப்படவில்லையென்று தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து எதுவுமில்லை எனவும், இனப்பிரச்சினை தீர்வு குறித்து இரு கட்சிகளும் எதிரெதிரான கருத்துக்களைக் கொண்டி

(14ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்குக்கு நிதியை ஒதுக்க ஒரு கட்டமைப்பை நிறுவுவது அரசின் பணி

### ஜப்பானின் விஷேட பிரதிநிதி அகாஷி கூறுகிறார்

இலங்கை அரசுக்கே ஜப்பான் நிதிகளை வழங்கும். விடுதலைப் புலிகளினால் கோரப்பட்டவாறு வடக்கு, கிழக்கில் செலவிடுவதற்கு புலிகளுக்குப் பணம் வழங்கப்படுவதற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்குவது இலங்கை அரசைப் பொறுத்ததாகும்.

இலங்கைக்கான ஜப்பான் அரசின் விசேட பிரதிநிதியான யசூசி அகாஷி ஞாயிறு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் ஜப்பான் மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்கு பற்றினாலும், பங்குபற்றாவிட்டாலும் திட்டமிட்டவாறு அம் மாநாடு நடைபெறும் எனவும் தெரிவித்திருக்கும் அகாஷி, சமாதான நடைமுறையின் வெற்றியை நிபந்தனையாக வைத்தே நிதியுதவி உறுதிமொழிகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

தேசிய சேமிப்பு வங்கி வழங்கும்
வீடமைப்புக் கடன்



- 12%, 13%, 14% கவர்ச்சியான வருடாந்த வட்டி.
- 30 ஆண்டுகள் நீடித்த கடன் மீள் செலுத்தும் காலம்.
- கடனை திரும்பச் செலுத்துவதற்கான அதிகக்கூடிய வயது 65 ஆகும்.
- மறைமுக நிபந்தனைகளோ கட்டணங்களோ இல்லை.
- தலைமையகத்தில், 4 நாட்களில் கடன்களைப் பெறும்

எனது வீடு கட்டும் கனவு நனவாகிறது

NSB
உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தித்திட்ட நிதி ஒதுக்கீடுகளை இனவிகிதாசாரப்படி மேற்கொள்ள பணிப்பு

## அட்டாளைச்சேனை கலந்துரையாடலில் அமைச்சர் ஹக்கீம்

கிழக்கு அபிவிருத்தி அமைச்சின கீழுள்ள மாவட்டங்களில் அபிவிருத்தித திட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது ஒவ்வொரு பிரதேச சபைப் பிரிவினதும், இன விகிதாசாரத்திற்கேற்ப நிதி ஒதுக்கீடுகளைச் செய்யுமாறு அதிகாரிகளைப பணித்திருக்கிறேன். ஒலுவில் துறைமுகம் உட்பட பாரிய அபிவிருத்தி வேலைகள் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றன என்று முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் அட்டாளைச்சேனை பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடலுக்குத் தலைமைவகித்து அமைச்சர் ஹக்கீம் உரையாற்றினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

2 வருட காலத்திற்குள் 360 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் ஒலுவில் வர்த்தகத் துறைமுகம், கிழக்கு மாகாணம் முழுவதற்கும், பொருளாதார வர்த்தகத்துறை மேம்பாட்டுக்கு ஊற்றுக்கண்ணாகத் திகழும்.

அண்மையில் கிழக்கு அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதிகளுடன் இங்கு வந்த உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீட்டர் ஹெரல்ட் பல்வேறு உத்தேசத் திட்டங்கள் தொடர்பான கணிப்பொன்றினை மேற்கொண்டார். அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தின் முக்கிய பிரச்சினையான வெள்ளப் பெருக்குக்குத் தீர்வுகாணும் விதத்தில் வடிகால் அமைப்பு சம்பந்தமான கருத்திட்டம் ஒன்றைத் தயாரித்து, அதனை வெளிநாட்டு நிதி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் செயற்படுத்த நடவடிக்கைகளை எடுத்துவருகிறேன்.

மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பால் மேற்கொள்ளப்பட்டவாறு தீகவாபி விகாரையின் அபிவிருத்தித் திட்டத்துக்கு உதவ இருக்கிறேன்.

பாரபட்சமின்றி கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல இன மக்களுக்கும் நான் சேவையாற்றும் போதிலும் துரதிர்ஷ்டவசமாக சகோதர இன நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் - இவ்வாறு அவர் கூறினார்.

## பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியாகின.

ஆரம்பக் கல்வி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நூலக விஞ்ஞானம், நடனம், சங்கீதம், சித்திரம் ஆகிய துறைகளில் மாணவர்கள் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இவர்கள் தற்போது உள்ளகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். பரீட்சை முடிவுகளைக் கல்லூரியின் விளம்பரப் பலகையில் பார்வையிட முடியுமெனப் பீடாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.(ஐ)

## ஜனாதிபதிக்கு புதிய ஆலோசகர்

முன்னாள பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் தேர்தல் ஆணையாளருமான சந்திரானந்த டி சில்வாவை ஜனாதிபதி தனது ஆலோசகராக நியமித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மிகவிரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஹக்கீமின் கரத்தைப் பலப்படுத்த கோரும் பிரேரணை நிராகரிப்பு

## அம்பாறை பள்ளிவாசல்கள் சம்மேளனக் கூட்டத்தில்

சாய்ந்தமருது,ஜூன்2

வடக்கு - கிழக்கு மாகாண முஸலிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கரங்களைப் பலப்படுத்தவேண்டும். ஆளுக்கு ஒரு கருத்தை முன்வைக்காது ஒரே கருத்தை தலைவர் ஊடாக முன்வைக்கவேண்டும் என அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஒன்று சபையோரால் நிராகரிக்கப்பட்டது. இதனுடன் பிரேரிக்கப்பட்ட மற்றும் 9 பிரேரணைகளும் கைவிடப்பட்டு புதிய பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டன.

மேற்படி சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை சாய்ந்தமருது ஜும் ஆப் பள்ளிவாசல் மண்டபத்தில் சபையின் தலைவர் ஐ.எம்.முகைதீன் தலைமையில் கூடியது.

கூட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களின பள்ளிவாசல் தலைவர், செயலாளர், பொருளாளர் முதலான பல பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

சபையின் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்தில் 10 பிரேரணைகள் வாசிக்கப்பட்டன. அனைததும் சபையோரால் நிராகரிக்கப்பட்டன. இப்பிரேரணைகளை கொண்டுவந்தவர்கள் யார் என்ற கேள்வி சபையோரால் எழுப்பப்பட்டது. தபாலில் வந்த பிரேரணைகள் என செயலாளர் ஏ.எச்.எம்.மஜீந் தெரிவித்தார். அந்தப் பதிலில் சபையினர் திருப்தியடையவில்லை.

அதையடுத்து புதிய பிரேரணைகள் பிரேரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

✪ தற்பொழுது நாட்டில் அமுலில் இருக்கும் யுத்தநிறுத்தம் நிரந்தர சமாதானமாகவேண்டும் என பிரார்த்திப்பதோடு, தற்பொழுது தடைப்பட்டிருக்கும் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும், அப் பேச்சுக்களிலும் நிர்வாக அமைப்புக்களிலும் முஸ்லிம்களுக்கு உரிய பங்கு கிடைப்பதை உறுதிசெய்யுமாறும் ஜனாதிபதியையும், அரசையும் இச்சம்மேளனம் கோருகின்றது என்பது அங்கு நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளில் ஒன்றாகும்.

ஏனைய பிரேரணைகள் -

முஸ்லிம் காங்கிரஸ் ஒன்றுபடவேண்டும். சகல நாடாளுமன்ற உறுபபினர்களும் தேசிய பிரச்சினையில் ஒன்றுபட்டு செயலாற்றவேண்டும். சகல மாவட்ட உறுப்பினர்களையும் கொண்ட ஆலோசனைச்சபை ஒன்றை முஸ்லிம சமய கலாசார அமைச்சு ஏற்படுத்தவேண்டும். எம்.எச்.எம்.அஷ்ரப்பின் விமான விபத்து சம்பந்தமான அறிக்கையை உடனடியாக வெளியிடவேண்டும். மூதூர் சம்பவத்தை ஆராய ஆணைக் குழு நியமிக்கப்படவேண்டும் - என்பன போன்ற விடயங்களை வற்புறுத்துகின்றன.

# விடுதலைப் புலிகள் கைதுசெய்த இரண்டு பொலீஸாரும் விடுவிப்பு!

திருகோணமலை,ஜூன்2

தமிழீழ விடுதலைப் புலிகளால், தமது கட்டுப்பாட்டுப் பகுதியான மூதூர் கண்டல் பிரதேசத்தில் வைத்து வியாழனன்று கைதுசெய்யப்பட்ட இரண்டு பொலீஸாரும் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் விடுவிக்கப்பட்டனர்.

மூதூர், கட்டைப்பறிச்சானுக்கு அருகில் வைத்து மூதூர் மற்றும் சேருவில உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்களிடம அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். புஸ்பகுமார, காமினி ஹேரத் ஆகிய இரு பொலீஸாருமே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

புலிகளால் கைதுசெய்யப்பட்ட இரு பொலீஸ் காரர்களையும் விடுவிப்பது குறித்து சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே, புலிகளின் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.திலகருடன் பேசியிருந்தார். அத்துடன், கடந்த வாரம் மூதூர் சூனியப்பிரதேசத்தில் வைத்து புலிகள் - படையினருக்கிடையே நடைபெற்ற சந்திப்பின் போதும் இதுபற்றி பேசப்பட்டது.

மூதூர் பொலீஸ் உதவி அத்தியட்சகர் சமரக்கோன், சேருவில உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன ஆகியோரிடம் பொலீஸார் ஒப்படைக்கப்பட்டனர் என்று கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

# விளையாட்டுவிழா தொடர்பாக செயலகத்தில் இன்று மாநாடு

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள சமாதான விளையாட்டு விழா தொடர்பாக ஆராய்வதற்காக யாழ். செயலகத்தில் மாநாடு ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் காணி அமைச்சரும் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன கலந்துகொள்ளவிருக்கின்றார்.

இந்த மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் அரச அதிபர்களும் யாழ்.செயலக அதிகாரிகளும் கலந்துகொள்வர்.

இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக களுத்துறை மாவட்டத்தில் இருந்து அதிகாரிகளும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு மற்றும் களுத துறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள பங்கு பற்றிய முதலாவது சமாதான விளையாட்டு விழா களுத்துறையில் இடம்பெற்றது. இந்த விளையாட்டுவிழா தொடரில் 2 ஆவது விளையாட்டு விழாவே யாழ்ப்பாணத்தில் இடம் பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.(ஐ-3)

# நாவலப்பிட்டி இளைஞன் கொலை குறித்து இராணுவக் கப்டன், உதவியாளர் கைது!

## 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்

மட்டக்களப்பு,ஜூன்2

ஓட்டமாவடியில் நிகழ்ந்த நாவலப்பிட்டி இளைஞனின் கொலையில் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் இராணுவக் கப்டன் ஒருவரும் அவரது உதவியாள் ஒருவரும் மட்டக்களப்பு பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் 16 ஆம் திகதி நாவலப்பிட்டியில் இருந்து வந்து ஓட்டமாவடியில் தனது உறவினர் ஒருவரது வீட்டில் தங்கியிருந்த முஹமட் ராஷிக் உசைன் (வயது 27) என்ற இளைஞர் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

சீருடையில் வாகனத்தில் வந்த இனந்தெரியாத நபர்களே இந்த இளைஞனைக் கடத்திச் சென்று மீராவோடை பிரதேசத்தில் வைத்துக் கழுத்து வெட்டிக் கொன்றனர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இக் கொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் அஸீஸ் துவான் ஹஜ்ஜி என்ற இராணுவக் கப்டனும், ஜோசப் பெர்னாண்டோ சியாவுல்ஹக் என்ற அவரது உதவியாளருமே மட்டக்களப்புப் பொலீஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரையும் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் எம்.எப்.ஏ.கபூர் உத்தரவிட்டுள்ளார்.

(ஐ)

# மூளாய் ஆஸ்பத்திரியின் எதிர்காலம் பற்றி ஆராய்வு

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையின் எதிர்காலம் குறித்து ஆராய ஐவர் கொண்ட குழு ஒன்று நேற்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையின் எதிர் காலச் செயற்பாடு குறித்து ஆராய்வதற்காக விசேட கூட்டம் ஒன்று நேற்று வைத்தியசாலையில் இடம்பெற்றது.

வைத்தியசாலை அபிவிருத்திக் குழுத் தலைவர் எஸ்.இரத்தினசிங்கம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாணசபைச் செயலாளர் எஸ்.ரங்கராஜன், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா, கூட்டுறவுப் பிரதி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த வைத்தியசாலைச் செயற்பாடுகளை அரசின் உதவியுடன் மேற கொள்வதா அல்லது எந்த வகையில் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யமுடியும் என்பதும் குறித்து ஆராய குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டது. இரு மாதங்களுக்குள் இக் குழு அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

இக் குழுவில் பெ.கனகசபாபதி, எஸ்.இரத்தினராசா, ஆர்.ரி.விக்னராஜா, இ.பொன்னுத்துரை, எஸ்.கந்தசாமி ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

## கோரிக்கையை தட்டிக் கழிக்கும் போக்கிற்கு ஆட்சேபம்

# இடம்பெயர்ந்த வலி.வடக்கு மக்கள் பிரதமருக்கு நாளை மகஜர் சமர்ப்பிப்பு

வலி.வடக்கு,ஜூன்2

வலிவடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர அனுமதிக்கக் கோரி இடம் பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை பிரதமருக்கு மகஜர் ஒன்றை அரச அதிபர் மூலம் அனுப்பி வைக்கவுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி யாழ். செயலகத்தின் முன்பாக இடம்பெற்ற மறியற் போராட்டத்தைத் தொடர்ந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள் குடியமர்வு சம்பந்தமாக இன்றுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனை ஆட்சேபித்தே பிரதமருக்கு மகஜர் அனுப்பப்படவுள்ளது.

வலி.வடக்குப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் கலந்துரையாடல் சுன்னாகத்தில் இடம்பெற்ற போது இது தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டது.

இம் மகஜரின் பிரதியை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு, பாதுகாப்பு அமைச்சு, மனித உரிமைகள் ஆணைக்குழு, மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு உட்பட வெளிநாட்டு தூதரகங்களுக்கும் அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஐ-86)

# அட்டாளைச்சேனை மீனவர் மூவரை கடலில் படகுடன் காணவில்லை!

அட்டாளைச்சேனைப் பகுதியில் இருந்து மீன்பிடிக்க ஆழ்கடலுக்குச் சென்ற ஒரு மீன்பிடிப் படகு காணாமற் போயிருக்கின்றது. நேற்றுமுன்தினம் மாலை கடலுக்குச்சென்ற அப் படகில மீனவர் மூவர் இருந்துள்ளனர்.

அப்படகு கடல் அலைகளில் சிக்கி இழுத்துச்செல்லப்படுவதைத் தாங்கள கண்டதாக கரை திரும்பிய மீனவர்கள் சிலர் அக்கரைப்பற்று பொலீஸில் தெரிவித்திருக்கின்றனர்.

காணாமற்போன இம் மீனவர்கள் மூவரையும் தேடிக் கண்டுபிடிப்பதற்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவசர நடவடிக்கைகளைக் மேற்கொண்டுள்ளார்.

இதையடுத்து கல்முனை தொடக்கம் பொத்துவில் வரையிலான கடற்பரப்பில் விமானப் படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது.

அமைச்சர் ஹக்கீம், கிழக்குப்பிராந்திய கடற்படை பிரதிக் கமடோர், விஷேட அதிரடிப்படைக் கமடோர், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் வசந்த ரத்னாயக்கா ஆகியோருடனும் தொடர்பு கொண்டுள்ளார்.

**உங்களின் வீட்டில் இடம்பெறும் விசேட தினங்களில் ஒரு மரம் நடுங்கள்**

**(மே 29 முதல் ஜூன் 4 வரை சூழல் விழிப்புணர்வு வாரம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாளித்துவ எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அதிகரிப்பு

# ஜி-8 மாநாட்டில் கலந்துகொள்ள வரும் தலைவர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்!

ஈவின்,ஜுன்2

பிரான்ஸில் ஜி-8 நாடுகளின் மாநாட்டை எதிர்த்து பாரிய ஆர்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்தி அல்கெய்டா போன்ற திவிரவாத அமைப்புகள் மாநாட்டில் பங்கேற்கும் தலைவர்களை கொல்ல முயற்சிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

உலகின் முன்னனி தொழில் வளநாடுகளின் மாநாட்டை இலக்கு வைத்து பிரான்ஸில் பாரிய அளவில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கிழக்கு பிரான்ஸின் ஈவின் நகரில் தொழில் வளநாடுகளின் மாநாடு ஆரம்பமாகின்றது. இதனையொட்டி முதலாளித்துவ எதிர்ப்பாளர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

நேற்றுக் காலை ஈவின் நகரருகே உள்ள பிரதான வீதியில் சுமார் 1,500 பேர் மறியலில் ஈடுபட்டனர். அனிமஸி நகரிலிருந்து மேற்கு ஈவின் பகுதி வரையிலான 10 கிலோ மீற்றர்கள் தூரத்துக்கு ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தியவர்களே இந்த வீதி மறியலில் ஈடுபட்டனர். அமெரிக்க அதிபர் ஜோஜ் புஷ் உட்பட உலகின் வளர்ந்த நாடுகளின் தலைவர்கள் ஈவின் நகரில் கூட உள்ளனர். இந்த நிலையில் அங்கு உலகமயமாதலுக்கு எதிரானவர்களும் முதலாளித்துவ எதிர்ப்பாளர்களும் ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றனர். இதனால், மாநாட்டில் பங்கேற்கும் தலைவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் நெருக்கடிநிலை உருவாகியுள்ளது.


பிரான்ஸில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின் காட்சி

இந்த மாநாட்டை பல மாதங்களாக திட்டமிட்டு பிரான்ஸும் சுவிற்ஸர்லாந்தும் ஏற்பாடு செய்துள்ளன. இரு நாடுகளின் பொலீஸாரும் ஈவின் நகரிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் குவிக்கப்பட்டுள்ளனர். மாநாட்டில் பங்கேற்கும் தலைவர்கள் ஈவின் நகரிலேயே தங்குகின்றனர். ஆனால், சீன அதிபர் ஹுஜின்டோ உட்பட மாநாட்டுக்கு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ள சில நாடுகளின் தலைவர்கள் ஜெனீவா ஏரியின் மறுபுறமுள்ள லோசன்னி என்ற சுவிஸ் நகரில் தங்கியுள்ளனர். இவர்கள் ஜெனீவா ஏரியைக் கடந்தே மாநாட்டு மண்டபத்துக்கு வரவேண்டியுள்ளது.

இந்நிலையில் மாநாட்டு மண்டபத்துக்கு தலைவர்கள் சென்று சேர ஆர்ப்பாட்டக்காரர்கள் இடையூறுகளை ஏற்படுத்தக்கூடும் என்று கருதப்படுகிறது. ஆனால், ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளை விட தீவிரவாத அச்சுறுத்தலே பிரஞ்சு மற்றும் சுவிஸ் அரசுகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

உலகின் வறுமையை தொழில் வளநாடுகள் உதாசீனப் படுத்துவதாகவும் -

அதனை உலகத் தலைவர்களுக்கு உணர்த்தவே அமைதியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதாகவும் -

இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் கூறிவருகின்றனர். ஆனால், கடந்த சனிக்கிழமை அனிமஸி நகரில் ஆர்ப்பாட்டக் காரர்கள் கற்களையும், பெற்றோல் குண்டுகளையும் பொலீஸார் மீது வீசியுள்ளனர்.இத்தகைய கலவரச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அல்கெய்டா போன்ற சர்வதேசத் தீவிரவாத அமைப்புகள், அமெரிக்க அதிபர் போன்ற தமது பிரதான எதிரிகள் மீது தாக்குதல் நடத்த வாய்ப்பு உண்டு. இதனாலேயே மேலதிகமாக ஜேர்மனியிலிருந்தும் பொலீஸாரை பிரான்ஸும் சுவிற்ஸர்லாந்தும் வரவழைத்துள்ளன.

(ஓ)

# சோனியாவைக் கொல்லச் சதி: மேடைக்கு அருகே வெடிகுண்டு!

ஸ்ரீநகர்,ஜுன்2

இந்தியாவில் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் மாநாடு காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகரில் நடைபெற்றது.காங்கிரஸ் தலைவி சோனியா இந்த மாநாட்டை தொடக்கி வைத்தார்.

இந்த 2 நாள் மாநாடு நேற்றுடன் முடிவடைந்தது. பின்னர் காஷ்மீரில் வேறு பல நிகழ்ச்சிகளிலும் சோனியா கலந்துகொண்டார்.

நேற்று அவர் வடக்கு காஷ்மீரில் உள்ள பாரமுல்லா மாவட்டத்தில் காங்கிரஸ் பொதுக்கூட்டத்திலும் பேரவையிலும் பேசுவதாக இருந்தது. இந்த நிலையில் பொதுக்கூட்டத்துக்கு வரும் சோனியாவை கொலை செய்ய தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளனர். ஆனால், அந்த சதித் திட்டம் முறியடிக்கப்பட்டுவிட்டது. சோனியா சுற்றுப் பயணத்தையொட்டி காஷ்மீர் மாநிலம் முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. பாதுகாப்புப் படையினர் கூடுதலாக பணியில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர்.



ஆனால், இந்தத் தீவிரப் பாதுகாப்பையும் மீறி தீவிரவாதிகள் சோனியாவை கொல்ல வெடிகுண்டை மறைத்து வைத்துள்ளனர். ஸ்ரீநகர் பாரமுல்லா நெடுஞ்சாலையில் கவாஜாபா என்ற இடத்தில் இந்த கண்ணி வெடி புதைத்து வைக்கப்பட்டிருந்தது. பளட்காம்ப்ளக்ஸ் என்ற கட்டடத்தின் அருகே இந்த வெடிகுண்டை தீவிரவாதிகள் வைத்திருந்தனர். இந்த இடம் சோனியா பேச இருந்த பொதுக் கூட்ட மேடையில் இருந்து வெகு அருகே இருந்தது. சோனியா அந்த வழியாக செல்லும்போது வெடிகுண்டை வெடிக்கச்செய்து சோனியாவை கொல்ல தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால், சோனியா வருவதற்கு சிலமணி நேரத்துக்கு முன்பு பாதுகாப்புப் படையினர் சோதனை செய்த போது இந்த சக்தி வாய்ந்த வெடி குண்டு சிக்கியது. நேற்றுக்காலை 8 மணிக்கு இந்த வெடிகுண்டு கைப்பற்றப்பட்டது. சோனியாவையும் காங்கிரஸ் முதல் மந்திரிகளையும் கொல்ல தவிரவாதிகள் மேற்கொண்ட சதி அந்த மாநிலம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கின்றது.

# விமானக் கண்காட்சியில் விபத்து!

லண்டன்ஜுன்,02

பிரிட்டனின் புராதன விமானங்களின் மாதிரிகள் பங்கேற்ற கண்காட்சியில் விபத்து இடம்பெற்றது. இதில் சுவீடன் நாட்டு விமானியான பியரே ஹோலண்டர்(வயது 59) என்பவர் உயிரிழந்தார்.

புராதன விமானங்களைப் போன்றே வடிவமைக்கப் பட்ட விமானங்களின் கண்காட்சி பிரிட்டனில் வருடந்தோறும் நடைபெற்று வருகிறது.


1927ஆம் ஆண்டு கடலைக் கடந்த சார்ள்ஸ் ஏலைன் பேர்க் தனது 'ஸ்பிரிஸ் ஒவ் சென் லூயிஸ்' விமானத்துடன்...

இவ்வாண்டுக்கான கண்காட்சி பஹின்டன் விமான நிலையத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

உலகில் முதல் முதலில் கடலை ஆகாய மார்க்கமாக கடந்த சாள்ஸ் ஏலைன் பேர்க் என்பவர் அச்சாதனை புரிய 1927ஆம் ஆண்டில் ஸ்பிரிட் ஒவ் சென் லூயிஸ் என்று பெயரிடப்பட்ட விமானத்தையே பயன்படுத்தினார்.

அந்த விமானம் போன்று வடிவமைக்கப்பட்ட விமானத்தையே ஹோலாண்டர், கண்காட்சியில் செலுத்தினார்

அந்த விமானம் தரையிலிருந்து கிளம்பிய சிறிது நேரத்தில் அதன் இறக்கைகள் மடிந்து மேற்புறமாக திரும்பிக் கொண்டன. இதனையடுத்தே விமானம் தரையில் மோதி நொறுங்கியது. அதன் விமானியும் உயிரிழந்தார்.

(ஓ)

# பாபர் மசூதி இடிப்பு வழக்கில் அத்வானி மீது குற்றப்பத்திரிகை

ரேபரேலி,ஜுன்2

இந்தியாவின் உத்தரப்பிரதேச மானிலம் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக இந்தியத் துணைப் பிரதமர் அத்வானி மத்திய அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி உட்பட 8 பேர் மீது ரேபரேலி விஷேட நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகின்றது. இவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய இந்திய மத்திய புலனாய்வுத்துறைக்கு நேற்று வரை அவகாசம் கொடுக்கப்பட்டு இருந்தது. அதன்படி நேற்றுமுன் தினம் அத்வானி உட்பட 8 பேர் மதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் அது சம்பந்தமான துணை அறிக்கை ஒன்றும் தாக்கலானது. அந்த அறிக்கையில் 39 சாட்சிகளின் வாக்கு மூலங்கள் அடங்கியுள்ளன. மசூதி இடிப்பு தொடர்பான பத்திரிகை செய்திகள் மற்றும் ஆவணங்கள் அதில் இடம்பெற்றுள்ளன.

(ஓ)


ஹொங்கொங் நகர வீதியில் கம்பி கூண்டுக்குள் தானாகவே அடைபட்டுக் கொண்டிருக்கும் இவர் விலங்குகள் பாதுகாப்பு [illegible] கத்தைச் சேர்ந்தவர். விலங்குகளை இறைச்சிக்காக [illegible] கைவிடக் கோரியும் மரக்கறி உணவையே சாப்பிடும்படி வற்புறுத்தியும் இந்த நூதனப் போராட்டத்தை நடத்தினார்.

# வெளிநாடுகள் தமது தூதர்களை ஈராக்குக்கு அனுப்ப வேண்டாம்!

## அமெரிக்கா வலியுறுத்து

வாஷிங்டன்,ஜுன்2

ஈராக்கில் புதிய அரசுக்கான தேர்தலுக்கு முன் புதிதாகத் தூதர்கள் எவரையும் அனுப்பவேண்டாம் என்று உலக நாடுகளுக்கு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்க அரசின் அதிகாரி ரிச்சர்ட் பௌச்சர், ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான இடைக்கால அரசுக்குத் தேவைப்பட்டால் தவிர வெளிநாடுகளைச் சேர்ந்த தூதர்கள அங்கு செல்லத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது:-

ஈராக்கில் பொதுவாக வெளிநாட்டவர்கள் வருவதில் தவறில்லை. ஆனால், அவர்களுக்கு தூதரக அந்தஸ்தை அளிக்க இயலாது. சதாம் ஹுசைன் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பிறகு, அங்குள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் அந்தஸ்து முடிந்துவிட்டது.

சதாம் ஆட்சியை அங்கீகரித்த தூதர்கள் இப்போது தூதரக அந்தஸ்து பெற உரிமை இல்லை. அதே சமயம் தூதரங்களின் சொத்துக்கள் சர்வதேச விதிகளின் படி பாதுகாக்கப் படும் என்றார் பௌச்சர்.

இதேவேளை, பக்தாத்தில் உள்ள பலஸ்தீன தூதரகத்தின் அருகில், குண்டுவெடித்து, அமெரிக்க வீரர் ஒருவர் உயிரிழந்தார். அதையடுத்து, பலஸ்தீன தூதரகத்தில் அமெரிக்க படைகள் சோதனையிட்டன. அங்கிருந்த மூன்று அதிகாரிகள் கைதாகினர்.

(ஓ)

## உலக அரங்கில்

### சூறாவளிக்கு 41பேர் பலி!

பிலிப்பைன்ஸின் வட பகுதியில் கடந்த சில நாள்களாக கடுமையான சூறாவளி காற்று வீசியது. கடலோர பகுதிகளில் தாழ்வான இடங்களில் கடல் நீர் புகுந்துவிட்டது. இதில் ஏராளமான குடிசைகள் மூழ்கின. பலத்த புயல் காற்றில் ஆயிரக்கணக்கான [illegible] விட்டன. இந்த சூறாவளிக்கு இது வரை 41 பேர் பலியாகிவிட்டனர். மேலும் 8பேரை காணவில்லை.

# சார்ஸ் பட்டியலில் இருந்து சிங்கப்பூர் நீக்கப்பட்டது!

சிங்கப்பூர்,ஜுன்2

சார்ஸ் பாதித்த நாடுகள் பட்டியலில் இருந்து சிங்கப்பூர் நீக்கப் பட்டுள்ளது.

சிங்கப்பூரில் சார்ஸ் நோயினால் 206பேர் பாதிக்கப்பட்டனர். 31பேர் பலியாகினர்.

கடந்த 20நாள்களாக சார்ஸ் நோய் பாதித்தவர்கள் யாரும் சிங்கப்பூரில் அடையாளம் காணப்பட வில்லை.இதைத் தொடர்ந்து சார்ஸ் பாதித்த நாடுகள் பட்டியலில் இருந்து சிங்கப்பூரின் பெயரை நீக்கி உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு வெளியிட்டது.

இதன் மூலம் அந்த நாட்டில் சுற்றுலாத்துறை மற்றும் அத்துறை தொடர்புடைய தொழில்களில் நிலவி வந்த தேக்க நிலை அகலும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

அந்நாட்டு அரசு மிகவும் கடுமையான மற்றும் தீவிரமானதடுப்பு நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக சார்ஸ் நோய் கட்டுப்படுத்தப்பட்டது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவிக்கின்றது.

இருந்தபோதிலும், சார்ஸ் மீண்டும் தாக்குவதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்கமுடியாது என்று அந்நாட்டு சுகாதார அமைச்சகம் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிந்திய திருச்சபை - நகர்பணி

☆ தையற்கலை ☆ கேக் ஐசிங் ☆ சிகையலங்காரம்
☆ பூவேலை ☆ தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து
☆ ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து

ஆகியவற்றுக்கான புதிய வகுப்புகள் 05.06.2003 வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளன. விண்ணப்பங்களை நேரில் பெற்றுக்கொள்ளவும்.

இல.41, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (18627) - நிர்வாகி.


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது கல்லூரி ஆசிரியர் திரு.சி.சிவகுமாரன் அவர்களின்
அன்பு மாமனார்

### செல்லப்பா ஐயம்பிள்ளை

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆன்ம ஈடேற்றத்துக்காகவும் இந்நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி. (18611) - ஆசிரியர் கழகம்.

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 10 - 01 - 1918



இறப்பு 02 - 06 - 1999

அமரர்

### ஏரம்பு சின்னத்துரை

திதி: 02.06.2003

நான்கு ஆண்டுகள் ஆனாலும்
ஆறாது உங்கள் பிரிவுத் துயர்!

"துரை மலர்ப் பொய்கை"
கனகேந்திரா தொலைத் தொடர்பு நிலையம்,
செட்டிவளவு லேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.
T.P. No. Local 021 - 222 - 3715
Idd 0094 21 222 3715 (18257)

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரன்,
சகோதரி, மச்சான், மச்சாள்மார்.

## வெள்ளத்தால் வீடுகளை இழந்தோருக்கு நஷ்ட ஈடு

கொழும்பு,ஜூன்2

தென்பகுதியில் வெள்ளத்தினால் வீடுகளை இழந்தவர்களுக்கு 20 பேர்ச் காணியும், வீடமைப்புக்கென ஒரு லட்சம் ரூபாவும் அரசினால் வழங்கப்படும்.

அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததும் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மேலதிக உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக இந்தியா, நோர்வே, ஜப்பான், சீனா, ஜேர்மனி மத்திய கிழக்கு நாடுகள் என்பனவற்றின் இராஜதந்திர தூதுவர்களுடன் இன்று திங்கட்கிழமை விசேட சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெரு வெள்ளம், மண்சரிவு என்பனவற்றினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த அறிக்கையும் அவர்களிடம் கையளிக்கப்படும். (எ-9)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

குருநகர்,ஜூன்2

யாழ்ப்பாணம், 2ஆம் குறுக்கு வீதியில் கட்டாக்காலிகளாகத் திரியும் வளர்ப்பு நாய்களினால் இவ்வீதியூடாக மாலை நேரங்களில் பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.பிரதான வீதிக்கும் - சப்பல் வீதிக்கும் இடையில் உள்ள இரண்டாம் குறுக்கு வீதியில் குடியிருககும் ஒரு சில குடியிருப்பாளர்கள் தமது வளர்ப்பு நாய்களை மாலையானதும் வீதிக்குச் செல்ல அனமதிக்கின்றனர் எனவும் -

இவைகள் இவ்வீதியால் பயணிப்பவர்களை நோக்கிப் பாய்ந்து வந்து குரைப்பதனால் பயணம் செய்வோர் மிகுந்த அச்சத்துடனேயே பயணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டு வருவதாகவும் -

சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - கோரிக்கை விடுக்கப்பட்டது. (எ-51)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நடத்தும்

## வெளியீட்டு விழா

## 'மருதத்திணை'

ஆசிரியை : வாசுகி சொக்கலிங்கம்
இடம் : பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடம்
காலம் : இன்று (02.06.2003) திங்கட்கிழமை பி.ப.3மணி
தலைவர் : திரு.ந.சத்தியவேந்தன்
ஆசியுரை : மஹாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள்
வாழ்த்துரை : துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்
வெளியீட்டுரை : பேராசிரியர் அ.சண்முகதாஸ்
அறிமுகவுரை : கலாநிதி சி.சிவலிங்கராஜா
ஆய்வுரை : கலாநிதி செ.திருநாவுக்கரசு

கருத்துரைகள்:
திருமதிகள் இராஜலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை, யோகேஸ்வரி சிவப்பிரகாசம்,
சரோஜா சிவச்சந்திரன், ,

தமிழறிஞர்கள், ஆர்வலர்கள் அனைவரும் வருக.

விளம்பர அன்பளிப்பு:

பூபாலசிங்கம் புத்தகசாலை
பெரியகடை, யாழ்ப்பாணம். (C-28165)



## சிறப்பு உதைபந்தாட்டப் போட்டி

THE HALO TRUST
கண்ணிவெடி
அகற்றும்
இலங்கை அணி

&

மொசாம்பிக் நாட்டு
கண்ணிவெடி
அகற்றும்
றொங்கோ அணி

இரு அணிகளுக்கும் இடையேயான
சிறப்பு உதைபந்தாட்டம்

காலம்: நாளை (03.06.2003) செவ்வாய்க்கிழமை
காலை 9.00மணி

இடம்: துரையப்பா விளையாட்டரங்கு

அனைத்து ரசிகர்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (18637) THE HALO TRUST


# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

## ஏழாம் ஆண்டு

## முதலாம் ஆண்டு





### செல்வன் நடராசா கிரிஷாந்தன்

(2ஆம் லெப்டினன்ட் பூவண்ணன் – யா/ஹாட்லிக் கல்லூரி மாணவன்)

### செல்வி நடராசா யமுனராதை

(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி)

| | | | | |
|---|---|---|---|---|
| 19.05.1976 | ← | மண்ணகம் | → | 10.09.1978 |
| 03.04.1996 | ← | விண்ணகம் | → | 13.06.2002 |

திதி: 02.06.2003

பூவண்ணா உந்தன் புன்னகை வடிவைக் கண்டு
பூமியே வியந்ததடா!
நேர் சென்று போர் செய்த - நீ
எமை [illegible] வைத்தாயடா!
யன்னல் நிலவு போல ஜனனித்த ராதாவும்
நோயில் துவண்டு உன் வழியை நாடி வந்தாளடா!
எம் இரு செல்வங்களையும் இழந்து நாம் படும் துயரம்
சொல்லில் அடங்காதடா!
நாமிருவரும் உங்களின் விண்ணுலக வாழ்வில்
வந்து கூடுமட்டும்
இத்துன்பத்திலிருந்து நீங்க முடியாது தவிக்கின்றோம்.
உங்களின் ஆத்மா சாந்தியடைய உங்களின் வழிபடு
தெய்வங்களாகிய கிழவிதோட்டப் பிள்ளையாரையும்
அத்துளு அம்பாளையும் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிழவி தோட்டம்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி. (18594)

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, உற்ற உறவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மாறாத போக்கு இது!

பெரும்பான்மை மக்களின் கட்சிகள் ஆட்சி அதிகாரத்துக்காகத் தங்களுக்குள் சண்டை இட்டுக் கொண்டாலும் தமிழர்களின் உரிமைகளை மறுப்பதில் தங்களுக்குள் ஒன்று பட்டுக்கொள்வார்கள் என்பது மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

1994இல் சந்திரிகா குமாரதுங்க ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக அமைதி முயற்சிகள், சமாதானப் பேச்சுக்கள் என்று முழங்கிக்கொண்டு மேடைகளுக்கு வந்தார். அப்போது அவருக்கு எதிர்த்தரப்பில் இருந்த ஐ.தே. கட்சி அந்த முயற்சிகளை எதிர்த்தது.

அமைதி முயற்சிகளைக் காட்டி ஆட்சியைப் பிடித்த ஜனாதிபதி குமாரதுங்க 'சமாதானத்துக்கான போர்' என்று பிரகடனப்படுத்தி யுத்த தீவிரத்துக்குள் நாட்டை புகுத்தியதும் ஐ.தே.கட்சி தனது சுருதியை மாற்றிக் கொண்டது. அமைதி முயற்சி, சமாதானப் பேச்சுக்கள் என்ற 'அரசியல் ஆயுதங்களை' ரணில் விக்கிரமசிங்க தனது கையில் தூக்கிக்கொண்டார். அதை வைத்தே பொதுத் தேர்தலில் வென்று அரசை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்.

இப்போது அந்த அமைதி முயற்சிகளின் ஒரு கட்டமாக இடைக்கால நிர்வாகத்தை தமிழர்களுக்கு வழங்கவேண்டிய கட்டாயம் அவருக்கு,

யுத்தத்தினால் சொல்லொணாத் துன்ப துயரத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் தமிழர்களின் அவசர - அவசிய - அடிப்படை மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக - இடைக்கால ஏற்பாடாக - ஒரு நிர்வாக அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்ற நிலைமை வந்ததும் சிங்களப் பேரினவாதப் பிசாசு மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி அமர்ந்துகொண்டுவிட்டது.

புலிகள் நெகிழ்ச்சிப்போக்கை கடைப்பிடிக்கவேண்டும் என்று கோரும் பிரதமர் ரணில், தனது அரசு நாட்டின் சட்டத்தையும் அரசமைப்பையும் மீறி நடக்க முடியாது என்று காரணம் கூறி, புலிகள் கோரிய இடைக்கால நிர்வாக முறையை நிராகரித்திருக்கின்றார்.

நல்லது, பிரதமர் சட்டத்துக்கும் அரசமைப்புக்கும் கட்டுப்பட்ட உண்மையான அரசியல்வாதி, சட்டத்தை மீற முடியாதவர் - மீறாதவர் என்றே வைத்துக்கொள்வோம்.

கடந்த பொதுத் தேர்தலின்போது தனது வாக்குறுதிகளை வெளியிடும் தேர்தல் விஞ்ஞாபனத்தில், தனது அரசு ஆட்சிக்கு வந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகத்தை புலிகளுக்குக் கையளிப்பேன் என்று அறிவித்திருந்தார் ரணில்.

அப்படி அறிவிக்கும்போது அது சட்டத்துக்கு அமைந்து வராது என்பது ரணிலுக்குத் தெரிந்திருக்கவில்லையா? தேர்தல் காலத்தில் எதையெதையாவது அறிவித்து மக்கள் காதில் பூச்சுற்றலாம் என்ற நினைப்பில் அப்படி அறிவித்துவிட்டு இப்போது உண்மையில் இயலாது என்பதால் அப்படிக் கூறுகின்றாரா?

பிரதமர் ரணிலின் அமைதி முயற்சிகளை இதுவரை காட்டமாக எதிர்த்து வந்த பொ.ஐ.முன்னணி கூட, இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு வழங்க முடியாது என்று பிரதமர் கூறுவதும், அதை முழுமையாக ஆதரிப்பதாக பாய்ந்து விழுந்து பிரகடனப்படுத்துகின்றது. அதாவது தமிழர்களுக்கு ஏதேனும் உரிமையை - அது இடைக்கால ஏற்பாடாக இருந்தாலும் கூட - அதை வழங்காமல் தடுப்பது என்றால் பெரும்பான்மைச் சிங்களவர்களின் கட்சிகள் ஒற்றுமைப்பட்டுவிடும் என்பது மீண்டும் நிருபணமாகி இருக்கின்றது.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் - இலங்கையின், இலங்கை அரசினுடையதல்லாத ஒரு நிர்வாகப் பிரதேசம் உள்ளது; இலங்கை அரசுக்குப் புறம்பாக அங்கு வேறு ஒரு சட்ட ஒழுங்கு நிர்வாக அலகு உள்ளது; அங்கு இலங்கை இராணுவத்துக்குப் புறம்பாக வேறு இராணுவம் உள்ளது - என்பதெல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவை இலங்கையின் அரசமைப்பை, சட்டங்களை மீறிய விடயங்கள்; செயற்பாடுகள்.

அதனை ஏற்று அங்கீகரித்து - அரசமைப்பை மீறிய ஒப்பந்தத்தில் - பிரதமர் ரணில் ஒப்பமிட்டுள்ளார். அந்த ஒப்பந்தத்தை மேலோட்டமாக ஜனாதிபதி எதிர்த்தாலும், அரசமைப்பை மீறிய அந்தச் செயற்பாட்டுக்காக பிரதமர் ரணில் மீதோ அவரின் அரசு மீதோ அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. கடந்த 15மாதங்களாகப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கின்றார்.

அரசமைப்பையும் சட்டங்களையும் மீறி இடைக்கால நிர்வாகத்தை புலிகளுக்கு வழங்கினால் எனது அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசுக்கெதிராக நடவடிக்கை எடுப்பேன் என்று மிரட்டும் ஜனாதிபதி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மாத்திரம் பார்த்துக்கொண்டிருப்பது ஏன்?

யுத்தத்தால் அழிந்து, தடுமாறி மீள முடியாமல் சிக்கித் கிடக்கும் சிங்கள மக்களும் அரசும் மீட்சி பெற்றுத் தப்பிப்பிழைக்க வேண்டுமானால் - யுத்த அழிவுகளிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமானால் - எப்படியாயினும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். தங்களின் அரசும் நிர்வாகமும் யுத்தத்தால் தடுமாறி அழிந்து போகாமல் பிழைக்க வேண்டுமானால் - அழிந்துபோன பொருளாதார நிலைமையின் இறுக்கத்திலிருந்து தாங்கள் தப்புவதானால் - வெளிநாட்டு உதவிகள் கிடைக்க வேண்டுமானால் - ஏன் இலங்கை அரச முறைமையே தப்பிப் பிழைக்க வேண்டுமானால் - எவ்வாறாயினும் யுத்தம் நிறுத்தப்படவேண்டும்; அமைதிநிலை நீடிக்கவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

சிங்களவர்களுக்கும், தெற்குக்கும் மீட்சி வேண்டுமானால் அரசமைப்பையும், சட்டத்தையும் ஒரு பொருட்டாக மதிக்காமல் புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்ய அவர்கள் தயார். ஆனால், பெரும் மனிதப் பேரழிவில் சிக்கியிருக்கும் - யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும்- ஈழத் தமிழர்களுக்கு அவர்களுக்கான அவசர நிவாரணப் பணிகளை வழங்குவதற்காக ஓர் இடைக்கால ஏற்பாட்டைத் தன்னும் கொடுப்பதாயின் அவர்களுக்கு சட்டமும் அரசமைப்பும் பெருந்தடையாகத்தெரிகின்றது.

சிங்களப் பேரினவாதம் தனது போக்கிலிருந்து மாறாது என்பதற்கு இதுவோர் உதாரணம்.

## மீள் நியமனத்துக்கு விண்ணப்பம் அனுப்புவதில் புதிய நடைமுறை

### மாகாண அமைச்சின் செயலர் அறிவிப்பு

குருநகர்,ஜூன்2

அரச திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளில் ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் பெற்று சேவை புரிய விரும்புவர்களது விண்ணப்பங்கள் யாவும் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் மீள் நியமனம் செய்யப்படும் திகதிக்கு 4 மாதங்களுக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்கப்படவேண்டுமென வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம் அறிவித்துள்ளார். மீள்நியமனம் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபத்திலேயே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இந்தச் சுற்றுநிருபத்தின்படி -

வடக்கு - கிழக்கு மாகாண சேவையின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனம் கோருபவர் சிறந்த உடல் மற்றும் உள நலத்தை உடையவராக இருத்தல் வேண்டும். இதேவேளை - சம்பந்தப்பட்ட திணைக்களத்தில் பதில் கடமை மூலம் குறிப்பிட்ட வெற்றிடத்தை நிரப்பமுடியாமல் இருக்கவேண்டும். இவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட நபருக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனம் வழங்குவது அவசியமானது என திணைக்களத் தலைவரோ அல்லது பிரதேச செயலாளரோ சிபார்சு செய்யப்படவேண்டும். அத்துடன் ஒப்பந்த அடிப்படையிலான மீள்நியமனங்கள் யாவும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றே வழங்கப்படவேண்டும். உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரிலேயே இந்தப் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படுகிறது. (ஒ-51)

## கசிப்பு மாண்மியம்

### பெருங்குடி மகன்

பெருத்த பேர்வண்டி தள்ள
பெருங்குடி மகன் இருவர்
ஒருவர் முன் ஒருவராக
ஓரமாய் கிடந்தார் வாட்டில்
அடித்தேன் கசிப்பு காலை மாலை
அதுதான்ரா இந்த வண்டி
குடிமகள் பதில் உரையாய்
கள்ளுடன் கலந்தால் மச்சான்
கடும் வண்டி தள்ளா தென்றான்
பெறுமாத கெர்ப்பனி போல்
பிரண்டு போய் கிடக்கு தென்று
பெண்டுகள் பேசிக் கொண்டு
போயினர் இவர் அருகால்
மச்சானும் மச்சாளுமாய்
மறுபக்கம் பிரண்ட வாறு
இழுத்து நீ போர்த்துக் கொண்டால்
இவ்வண்டி தெரியா தென்ன
அடுத்தங்கு டாக்டர் வந்து
அரை அடி ஊசி ஏற்றி
அரை வாளி நீர் இறைக்க
அவ்வண்டி வற்றிப் போய்ச்சு

- விகடகவி.

## காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையில் இருந்து

# சுயவிருப்பில் ஓய்வு பெறுவோரின் நஷ்ட ஈட்டுத் தொகை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெற வசதியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள நஷ்டஈட்டுத் தொகையை அதிகரிக்க கொள்கை அளவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியின் உதவியுடன் சிமெந்துப் பொதுத் தொழிலாளர் ஒன்றியப் பிரதிநிதிகள் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதில் இந்த இணக்கநிலை ஏற்பட்டுள்ளது.

கைத்தொழில் அமைச்சருடன் பேச்சு நடத்தியதன் பயனாக சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெறும் திட்டம் ரத்துச் செய்யப்பட்டு தொழிலாளர்கள் தமது வரவை வழமைபோல் பதிவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பிரதமர், கைத்தொழில் அமைச்சர், தொழில் முயற்சி அபிவிருத்தி கைத்தொழில் அமைச்சர் ஆகியோருடன் தொடர்புகொண்டு பேசியதை அடுத்து சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மொத்தத் தொகையை அதிகரிக்க கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன்படி புதிய நஷ்டஈட்டுப் பொதியின் விவரம் வருமாறு:-

★ பத்து வருடத்துக்கு மேற்பட்ட சேவையினை பூர்த்தி செய்த தொழிலாளர்களுக்கு அவர்கள் சேவையாற்றிய ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கு இரண்டுமாத வேதனமும், மேலும் சேவையாற்ற வேண்டிய காலப் பகுதிக்கு ஒவ்வொரு பன்னிரண்டு மாதத்துக்கு இரண்டரை மாத வேதனமும் நஷ்டஈடாக வழங்கப்படும்.

★ பத்து வருடங்களுக்கு குறைவான சேவையைப் பூர்த்தி செய்த ஒவ்வொரு ஊழியருக்கும் ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலப் பகுதிக்கும் ஐந்து மாத வேதனம் வழங்கப்படும்.

★ சகல ஊழியர்களினதும் ஓய்வுபெறும் வயதெல்லை அறுபது வருடங்களாகக் கணிக்கப்படுவதுடன் ஊழியர்களுக்கு நிலுவையாகவுள்ள கடன் மற்றும் கொடுப்பனவுகள் நஷ்டஈட்டுத் தொகையிலிருந்து கழிக்கப்படும்.

★ ஆகக்கூடிய நஷ்டஈட்டுத் தொகையாக நிறைவேற்றுத் தரத்திலுள்ளவர்களுக்கு ஆறு லட்சம் ரூபாவும் மத்திய தரத்திலுள்ளவர்களுக்கு ஐந்து லட்சம் ரூபாவும் சிறு பணியாளர் தரத்துக்கு நான்கு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும் வழங்கப்படும். (ம-3)

## மொரட்டுவ பல்கலைக்கழகத்தில்

## 'வைரஸ் காய்ச்சல்' பீதியால் கல்வி நடவடிக்கைகள் நிறுத்தம்

கொழும்பு,ஜூன்2

மொரட்டுவ பல்கலைக்கழகம், அதன் கல்வி நடவடிக்கைகளை சில நாள்களுக்கு இடைநிறுத்திவைப்பதெனத் தீர்மானித்துள்ளது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் சிலருக்கு ஒரு வகை வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதை டுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும்,பாதிக்கப்பட்ட மாணவர்கள் எவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படவில்லை என்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் தயானந்த விஜயசேகரா தெரிவித்துள்ளார்.

பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பங்களுக்கான புதிய மாணவர்கள் ஏற்கனவே திட்டமிட்டபடி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அனுமதிக்கப்படுவார்கள் என்றும் - அவர் தெரிவித்தார். (எ-9)

## சிறைச்சாலை முகாமைத்துவத்தில் திருத்தம் கொண்டுவர முயற்சி

### உள்துறை அமைச்சர் தகவல்

கொழும்பு,ஜூன்2

சிறைச்சாலை முகாமைத்துவ நடவடிக்கைகளில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் சிறைக் கைதிகளுக்கான வசதிகளை மேம்படுத்த வாய்ப்பு ஏற்படும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

களுத்துறையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான மாநாடு ஒன்றிலேயே அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

சிறுகுற்றங்களைப் புரிவோரை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்காது, அதற்கான மாற்றுத் திட்டமொன்றை உருவாக்கக் கூடிய வாய்ப்புகள் குறித்தும் இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்பட்டது. (எ-9)

### நாளை

வைகாசி 20
செவ்வாய்க்கிழமை
03.06.2003
திதி : திருதியை
பிற்பகல் 1.24 வரை
நட்சத்திரம் : புனர்பூசம்
முழுவதும்
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

இருக்கின்றதாய் ... குறை ... இல்லை, உன் ... டத்திலதான்.

## தென்மராட்சி தெற்குப் பகுதியில் மீளக்குடியமர உதவுங்கள்!

### தூதரகங்களிடம் கோரிக்கை

தென்மராட்சி,ஜூன்2

தென்மராட்சி தெற்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர உதவும்படி இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதரகங்களிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்கு, விவசாய சம்மேளனம் இந்தக் கோரிக்கை அடங்கிய மகஜரை அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென்மராட்சி தெற்கின் தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 600 குடும்பங்கள் கடந்த மூன்றரை வருடங்களாக தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாமல் ஏதிலிகளாக வேறிடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இப்பகுதிகளில் உள்ள 6ஆயிரம் ஏக்கர் நெற்காணிகளும், 3ஆயிரம் ஏக்கர் தெங்கு பனம் தோட்டங்களும் அழிந்து வருகின்றன. இப்பகுதிகளைப் பாதுகாப்புப் படையினர் அதி உச்ச பாதுகாப்பு வலயமாக அறிவித்துள்ளனர். இதனால் மக்கள் அப்பகுதியில் மீளக்குடியமர முடியவில்லை.

மக்களை மீளக்குடியமர்த்தக்கோரி ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரிடம் பல தடவைகள் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை. ஆகவே, தாங்கள் அரசுடனும் ஜனாதிபதியுடனும் தொடர்புகொண்டு பொதுமக்களின் அகதி வாழ்வு முடிவடைய உதவுங்கள் - என்றுள்ளது. (ஒ-117)

## யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல்கள்

குருநகர்,ஜூன்2

யாழ்.ப.நோ.கூ.சங்கக் கிளைகளுக்குரிய கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக தேர்தல்கள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் தலைமையில் இத்தெரிவுகள் இடம்பெற்றன. கிளைக்குழு உறுப்பினர்கள் அந்தந்த கிளைக்குழுக்களில் உறுப்புரிமை பெற்றவர்களின் அனுமதியுடன் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் இயங்கியபோது உறுப்புரிமை பெற்றவர்களும் தாம் விரும்பிய நிலைகளில் கிளைக்குழுத் தேர்தலில் பங்குபற்றும் உரிமை வழங்கப்பட்டதாகத் தத்துவமளிக்கப்பட்ட தவிசாளர் ... தெரியவந்தது. (ஒ-51)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2003

அம்பிகை அடியார்களே!

மேற்படி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் வைகாசி மாதம் 23ஆம் நாள் (06.06.2003) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வைகாசி மாதம் 31ஆம் நாள் (14.06.2003) சனிக்கிழமை பெரும் பொங்கலுடன் நிறைவடைகிறது.

நாளாந்த உற்சவ காலங்கள்

**பகல் உற்சவம்**
1. கிரியைகள் ஆரம்பம் - காலை 9.00 மணி
2. வசந்த மண்டபப் பூசை - காலை 11.00 மணி
3. திருவிழா நிறைவு - பகல் 1.30 மணி

**இரவு உற்சவம்**
1. வசந்த மண்டபப் பூசை - இரவு 8.00 மணி
2. திருவிழா நிறைவு - இரவு 10.30 மணி

23.06.2003 திங்கட்கிழமை மஹா சங்காபிஷேகம்

பகல் - அபிஷேகம் தொடர்ந்து நண்பகல் அன்னதானம் நடைபெறும்.
மாலை - அம்பாள் எழுந்தருளி வீதி உலா வந்து அடியவருக்குத் திருவருள் பாலிப்பார்.
திருவிழா நிறைவு - இரவு 2.00 மணி

**அறிவித்தல்**

மஹோற்சவ காலங்களில் தற்காலிக கடைகள் அமைக்க விரும்புவோர் 04.06.2003 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய முன்வீதியில் சமுகந்தந்து அன்றைய தினமே உற்சவ காலங்களுக்கான முழு வாடகைப் பணத்தையும் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று தங்கள் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

*அராலி,*
*ஆவரம்பிட்டி.* (சி-28157) **ஆலய பரிபாலன சபை.**

## 31ஆம் நாள் நினைவலைகள்

உதிப்பு 03 - 08 - 1942



உதிர்வு 04 - 05 - 2003

### அமரர் கந்தன் தில்லை
*(இளைப்பாறிய ஊழியர் - யாழ். போதனா வைத்தியசாலை)*

ஆறுதல் சொல்ல ஆயிரம்பேர் வந்தென்ன - உங்கள்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமோ - ஐயா?
தேறுதல் சொல்ல உறவுகள் வந்தென்ன - உங்கள்
திருமுகம் என்று காண்போம் ஐயா?
மாதமொன்று மறைந்ததுவே - எங்கள்
மனங்களில் என்றும் நிறைந்திருப்பாய் ஐயா!

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுகேட்டு எமது இல்லம் நாடி ஓடோடி வந்து எமது துயரில் பங்கேற்ற அன்புள்ளங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் செய்த அனைவருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்புத் தெய்வத்தின் நினைவாக யாழ். மரியன்னை பேராலயத்தில் நாளை (03.06.2003) செவ்வாய்க்கிழமை காலை 7.00மணிக்கு நடைபெறவுள்ள ஆத்மசாந்தித் திருப்பலிப் பூசையிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-28106)

*56/18, ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

உன் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12 - 02 - 1925



இறப்பு 10 - 06 - 1986

### அமரர் தம்பு கதிரவேலு
*(இளைப்பாறிய அதிபர், கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை)*

திதி: 02.06.2003 திருதியை

அன்பின் உறைவிடமே!
அறிவின் திருவுருவே!
எங்களைப் பிரிந்து சென்று
பதினேழு ஆண்டுகள் சென்றதையா!
எத்தனை எத்தனை ஆண்டுகள் ஓடிப்போனாலும்
எப்போதும் உங்கள் நினைவு நீங்காது நிலைத்திருக்கும்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*நிருவத்தம்பை,*
*ஊரிக்காடு,*
*வல்வெட்டித்துறை.* (18469)

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# அராலியில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

சண்டிலிப்பாய்,ஜூன்2

அராலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து ஏற்றும் பணி நாளை மறுதினம் புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.

4ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிமுதல் 10.30 மணிவரை அராலி தெற்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்திலும், காலை 10.30 மணி முதல் 11.30 மணிவரை களவத்துறை சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30 மணிமுதல் 12மணிவரை வேலவன் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 12.30 மணிமுதல் 1.30 மணிவரை அராலி கிழக்கு சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை அராலி பொது சுகாதார பரிசோதகர் அலுவலகத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிமுதல் 10.30 மணிவரை அராலி வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும், காலை 10.30 மணிமுதல் 11.30 மணிவரை செட்டியார்மடம் சிறுவர் பராமரிப்பு நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி முதல் ஒரு மணிவரை நாகேந்திர மடம் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் ஒரு மணிமுதல் 2.30 மணிவரை குலனை கலைவாணி சனசமூக நிலையத்திலும் நாய்களுக்கு தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை அராலி சுகாதார பரிசோதகர் ச.அருள்மாறன் செய்துள்ளார். (எ-135)

### எள், மிளகாய் கொள்வனவுக்கு நடவடிக்கை

சண்டிலிப்பாய்,ஜூன்2

சங்க உறுப்பினர்கள் உற்பத்தி செய்த எள்ளு, செத்தல் மிளகாய் ஆகியவற்றை கொள்வனவு செய்ய பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கள் தீர்மானித்துள்ளது.

ஒரு கிலோ எள் 55 ரூபாவாகவும், ஒரு கிலோ செத்தல் மிளகாய் 150 ரூபாவாகவும் கொள்வனவு செய்யப்படும் என்றும் -

விவசாயிகள் தத்தமது பிரிவு கிளை முகாமையாளர்கள் ஊடாக இந்த விற்பனை நடவடிக்கையை மேற்கொள்ளமுடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

### இளைஞர் படையணி பலப்படுத்தப்படும் என பிரதமர் அறிவிப்பு

கட்டுப்பாடு மிக்க தொழிற்படையொன்றை உருவாக்கும் நோக்கில், அரசு ஆரம்பித்த இளைஞர் படையணித் திட்டம் மேலும் பலப்படுத்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரசிங்க தெரிவித்துள்ளார்.

இளைஞர் படையணித் திட்ட நடவடிக்கைகளை ஆராயும் முகமாக அம்பளப்பிட்டிய இளைஞர் நிலையத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட விஜயத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-9)

### ரயர் தொழிற்சாலை ஊழியர் சுகவீனம்

கொழும்பு,ஜூன்2

கம்பஹா, உக்கல்கொட ரயர் உற்பத்தித தொழிற்சாலையில் பணியாற்றும் 55 ஊழியர்கள் விஷ இரசாயனப் பொருள் ஒன்றினால் சுகவீனம் அடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 55 ஊழியர்களில் 11பேர் சிகிச்சைபெற்று வெளியேறிவிட்டனர்.

மேற்படி தொழிலாளர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. மூச்சுத்தடை ஏற்பட்ட ஊழியர்களுக்குச் செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கம்பஹா பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ-9)

### நூல்களற்ற நூல் நிலையம்

சண்டிலிப்பாய், ஜூன்2

மாதகல் சென்.ஜோசவ் மகாவித்யாலயத்தில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் பாடசாலைக் கல்வியமைச்சரால் திறந்துவைக்கப்பட்ட நூல்நிலையத்திற்கு நூல்கள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என்று பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நூல்கள் இல்லாமையால் மாணவர்கள் இந்த நூலகத்தைப் பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. வன்னிப் பிரதேசத்தில் இருந்து வந்து [illegible] குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-135)

### காற்றால் வீடுகள் சேதம்!

மணல்காட்டுப் பகுதியில் அண்மையில் வீசிய கடும் காற்றினால் இரு வீடுகள் முற்றாகச் சரிந்துவிழுந்து சேதமடைந்தன. யாழ்மனித முன்னேற்ற நடுநிலையம் இடம்பெயர்ந்தவர்களுக்கென மணல்காட்டுப் பகுதியில் 30 வீடுகளைக் கட்டிக்கொடுத்திருந்தது. அவற்றில் இரு வீடுகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன. (ஒ-173)

## காணி விற்பனைக்கு

**கோண்டாவில் சந்தி, இராமகிருஷ்ணா வீதியில், பலாலி வீதிக்கு 50 யார் தொலைவில் 7 பரப்புக் காணியும், பாம் ஸ்கூலுக்கு அண்மையில் பலாலி வீதியில் இருந்து 100 யார் தொலைவில் 18 பரப்புக் காணியும், இருபாலை வீதியில் இருந்து பாற்பண்ணைக்குச் செல்லும் வீதியில் 100 யார் தொலைவில் 24 பரப்புத் தோட்டக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு:-**

**S.சுரேஸ்.**
கலைவாணி மில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P. : 0777 - 064110

(18660)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 16 - 03 - 1925



மறைவு 03 - 05 - 2003

### அமரர் கணபதிப்பிள்ளை கந்தையா
(ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர், P.H.I.)

அன்பும் பண்பும் நிறைந்த எங்கள் அப்பாவின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

எங்கள் அன்புத் தந்தையாரின் இறுதிச்சடங்குகளின் போது சகல விதத்திலும் எமக்கு உதவிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (02.06.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் முதலான நிகழ்வுகளில் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"கௌரி மகால்'*
*மானிப்பாய் கிழக்கு,*
*மானிப்பாய்.* (c/28183) - குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



### சிவசுப்பிரமணியம் நந்தகுமார்
(நந்தன்)

மலர்வு 13.04.1984 உதிர்வு 04.06.2000

திதி: 02-06-2003

அன்புடன் அழைக்க தம்பி நீ இல்லை
நட்பினை பகிர நந்தா நீ இல்லை - உன்
புன்னகை முகமும் புதுமுகப் பொலிவும்
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
அழிந்திடாது எம் மனப்பதிவில்

*உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பணிகின்றோம்.*

தற்காலிக முகவரி:
*நாகபூசணி அம்மன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*

நிரந்தர முகவரி:
*துர்க்காபுரம்,*
*தெல்லிப்பழை.*

- **குடும்பத்தினர்.** (18640)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தென்னாபிரிக்காவின் அனுபவங்களின் அடிப்படையில்

# நாடாளுமன்றத்துக்கு வெளியே செயற்படுவது தொடர்பாக அரசும் புலிகளும் சிந்திக்கலாம்!

## அந்நாட்டு மனித உரிமைகள் குழுத் தலைவர் தெரிவிப்பு

தென்னாபிரிக்காவில் சுதந்திரத்தை நோக்கி முன்னேறியபோது வெள்ளையினப் பிரதிநிதிகளும் கறுப்பினப் பிரதிநிதிகளும் நாடாளுமன்றத்துக்குப் புறம்பாக - வெளியே - ஓர் அமைப்பு ரீதியாக இணைந்து செயற்பட்டோம். அதனை அனுபவமாகக் கொண்டு இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசும் விடுதலைப் புலிகளும் நாடாளுமன்றத்துககு வெளியே அமைப்பு ரீதியாகச் செயற்படுவது குறித்துச் சிந்திக்கலாம்.

- இவ்வாறு தெரிவித்தார் தென்னாபிரிக்காவின் மனித உரிமை ஆணைக குழுவின் தலைவர் கலாநிதி லியோன் வெசல்ஸ்.

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர்கூடத்தில் நேற்று முனதினம் நடைபெற்ற கருத்தரங்கில் 'தென்னாபிரிக்க சமாதானப் பயணத்தில் இடைக்கால அரசியல் அமைப்பு' என்னும் தலைப்பில் அவர் உரை நிகழ்த்தினார். உரையின் பின்னர் அங்கிருந்தவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் விடையளித்தார்.

அவர் அங்கு தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

அரசியல் அமைப்பு என்பது கடவுளால் உருவாக்கப்படவில்லை. அது மனிதர்களால்தான் உருவாக்கப்பட்டது. அதை மனிதர்களே மாற்றியமைப்பதில் பிரச்சினைகள் ஏதும் இல்லை.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எந்த மூன்றாம் தரப்பின் மீதும் எனக்கு நம்பிக்கை இல்லை. சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே நேரில் பேசி புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும். அப்போதே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் அரசுடன் கடிதப் பரிமாற்றங்களைச் செய்வதைவிட விடுதலைப் புலிகள் அதிரடியாகக் கொழும்பு சென்று பேசி வருவதே நல்லது என்று நான் நினைக்கின்றேன்.

தென்னாபிரிக்கப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் போது, பேச்சுக்களில் நாம் மிகவும் தெளிவாக இருந்தோம். ஓர் எல்லையினைக் கடந்து பணிந்து போவதிலலை என்பதில் மிகமிகத் தெளிவாக இருந்தோம். அப்படிக் கடந்து செல்வதானால், அது போர்க்களத்தைத் தாண்டிச் செல்வதாகவே இருக்க வேண்டும் என்று உறுதியெடுத்தோம்.

பேச்சு மேசையில் தோல்விகளைக் கண்டு நாம் பயப்படவில்லை. விமர்சனங்களைக் கண்டு நடுங்கவில்லை. அத்தகைய உறுதியின் மூலம்தான் எமது உரிமைகளை வென்றெடுத்தோம்.

பேச்சு மேசையில் எமக்கும் பல முட்டுக்கட்டைகள் வந்தன. தடைகள் வந்தன. ஆனால், சவால்களை எதிர்கொண்டோம். சவால்களுக்காக எமது முடிவுகளை மாற்றிக் கொள்ளவில்லை.

நாம் இடைக்கால நிர்வாகம் கோரிய போது மக்களுடன் எமது நடவடிக்கைகள் தொடர்பாக முரண்பாடுகள் ஏற்பட்டன. ஆயினும், எமக்கும் மக்களுக்கும் இடையில் ஓர் இனம்புரியாத நம்பிக்கையும் ஒத்திசைவும் இருந்தன. அதனால் நாம் இறுதியில் வென்றோம். அப்படி இருந்தால் நீங்களும் உங்கள் போராட்டத்தில் வெல்லலாம்.

எங்களது நாட்டின் அனுபவங்களைக் கொண்டு நீங்கள் (ஈழத் தமிழர்களும்) உங்கள் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

- இவ்வாறு தெரிவித்தார் கலாநிதி லியோன் வெசல்ஸ். (ம-ரி)

# இருபாலரும் கற்பதற்கு உகந்த மனைப்பொருளியல் கற்கைநெறி

தற்போது இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் வெளியாகி மாணவர்கள் உயர்தர வகுப்புகளுக்கு அடி எடுத்து வைத்துள்ளனர். இந்நிலையில் மாணவர்களுக்கிடையில் எப்பாடத்தைத் தெரிவு செய்வது என்பதில் குழப்பம் ஏற்படுகின்றது. முக்கியமாக இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு பாடநெறி மனைப்பொருளியல் ஆகும். இப்பாடநெறி முதன்முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த கல்வியாண்டில்(2001-2002) பல்கலைக்கழக அனுமதி முறையில் மனைப்பொருளியல் என்ற பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு மாணவர்கள் தற்போது கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதுதான் முதல் வாய்ப்பென்பதால் மாணவர்களின் எண்ணிக்கை குறைவு. ஆனால், இதன் முக்கியத்துவம் பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தப்படுமானால் தொடர்ந்து பலர் இதனைக்கற்க ஆர்வமாக முன்வருவார்கள்.

ஒருசில பாடசாலைகளில் மனையியல் உயர்தர வகுப்பில் கற்பிக்கப்படுகிறது. இத்தகைய புதிய நெறிகள் மாணவர்கள் மத்தியில் பிரபல்யமடையாத பாடங்களாகும். ஆனால், இவை மாணவர்களுக்கு மிகவும் நல்ல வழிகாட்டிகளாக எதிர்காலத்தில் அமையக்கூடியவை. பல பாடசாலைகளில் ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் மட்டுமே மனையியல் பாடம் கற்பிக்கப்படுகிறது. அதிகமான மாணவர்கள் இதனைக் கற்க முன்வருவதுமில்லை. இது எமது அறியாமை. அதனைக் கற்பதால் எதிர்காலம் இல்லை. பெண்கள் மட்டுமே கற்க வேண்டும். ஆண்கள் கற்பது தவறு; என்ற மனப்பாங்கு மாறவேண்டும். ஏனெனில் இவ்வளவு காலமும் இப்பாடநெறி பல்கலைக்கழக மட்டத்தில் இருந்ததில்லை. ஆனால், தற்போது அது ஒருபாட அலகாக பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பல மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு ஏற்படுகிறது.

பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னின்று இப்பாடத்தை உயர்தர வகுப்பில் ஒரு பாடமாகக் கற்பித்தால் மாணவர்களுக்கு அதனால் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுத்தரமுடியும். அண்மையில் வெளிவந்த சாதாரணதரப் பரீட்சை முடிவுகளின் பின் மாணவர்கள் எந்தத்துறைக்குப் போவதென குழம்பிப்போயுள்ளார்கள். அவர்களை நல்வழிப்படுத்தி அத்தகைய பாடங்களை பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு ஒரு பாதையைக் காட்டமுடியும்.

கலைப்பிரிவு மாணவர்கள் மட்டுமல்ல, விஞ்ஞானப்பிரிவு மாணவர்களும மனைப்பொருளியலை ஒரு பாடமாகக் கற்கலாம். இது ஒரு விஞ்ஞான ரீதியான கற்கை முறையாகும். இந்தியாவில் மாணவர்கள் மருத்துவத்துறையைத் தெரிவு செய்த பின்னர், அடுத்துத் தெரிவு செய்வது இந்த மனைப்பொருளியல் துறையையே. அது போன்று இங்கும் இப்பாடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இதனைப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

**கலாநிதி சுபதினி ரமேஷ்**
**இணைப்பாளர்,**
**மனைப்பொருளியல்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

மனைப்பொருளியலில் உள்ள பல பாட அலகுகளில் விஞ்ஞானம் சம்பந்தமான பல்வேறு அம்சங்கள் அறிவியல் ரீதியாக திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. இதில் உள்ள விஞ்ஞான மருத்துவக்கூறுகள் வருமாறு:-

உடற்கூற்றியல்(Physiology)
நுண்ணுயிரியல்(Micro Biology)
பிள்ளைவிருத்தி (Child Development)
உயிரியல் இரசாயனம் (Bio-Chemistry)
புடைவையும் உடையமைத்தலும (Textile & Clothing)
உணவு விஞ்ஞானம் (Food science)
மனை நிர்வாகம் (Home Management)
போசாக்கும் உணவும் (Nutrition & Dietetics)

எனவே, பெண்கள்தான் இந்தப் பாடத்தைக் கற்க உகந்தவர்கள் என பதைவிட ஆண்களும் இப்பாடத்தைப் பயிலலாம் என்பது இதனால் தெளிவாகின்றது.

குறிப்பாக கலைப்பிரிவு மாணவர்களைப் பொறுத்தவரை நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களும் பல வகையான பாடங்களைக் கற்கை நெறியாகக் கொண்டுள்ளன. இந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக கழகத்திலும் பல பாடங்கள் புதிதாக இந்தக் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மானிய ஆணைக் குழுவினர் கலைப்பாடங்களைப் பொறுத்தவரை இருவகையான பல்கலைக்கழக அனுமதியை நடைமுறையில் கொண்டுள்ளனர்.

சாதாரண அனுமதி, விசேட அனுமதி (Special Intake) என்பனவே அவையாகும்.

சாதாரண அனுமதி முறையில், மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வெட்டுப் புள்ளிக்கு மேலே புள்ளிகளைப் பெற்றவர்கள் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படுகிறார்கள். இவர்களின் தெரிவுப் பாடங்களாக அங்கீகரிக்கப்பட்ட கலைப்பிரிவைச் சேர்ந்த எல்லாப் பாடங்களும் அமையும். ஆனால், விசேட அனுமதி முறை என்பது, பல்கலைக்கழகத் தெரிவுக்கு உட்படாமல் வாய்ப்புக் கிடைக்காமல், ஆனால், ஓரளவுக்கு வெட்டுப் புள்ளிக்கு அண்மித்ததாகப் புள்ளிகளைப் பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். இவர்கள் ஜி.சீ.ஈ உயர்தரப் பிரிவில் கற்ற பாடங்களின் அடிப்படையில் நேரடியாகவே அந்தந்தப் பாடங்களுக்கு தெரிவு செய்யப்படுகிறார்கள். உதாரணமாக ஜி.சீ.ஈயில் இந்து நாகரிகத்தையோ, கிறிஸ்தவ நாகரிகத்தையோ ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்கள் பல்கலைக்கழகத்திலும் அந்தப் பாடத்தையே தொடர்ந்து கற்கவேண்டும். அவர்கள் பல்கலைக் கழக வாழ்நாளில் (3அல்லது 4 வருடங்கள்) தொடர்ந்து இப்பாடத்தையே கற்கவேண்டும். இவர்கள் விருப்புப் பாடமாக மற்றைய பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்யலாம். அது மட்டுமன்றி இப்பாடத்தை மட்டும்தான் (இந்து நாகரிகம்) சிறப்புப் பாடமாகக் கற்கமுடியும். ஏனைய பாடங்களை அவ்வாறு கற்க முடியாது.

மேற்கூறிய விசேட அனுமதிக்குட்பட்டு பாடசாலை மட்டத்தில் கற்பிக்கப்படாத பாடங்களாகவும் பல கற்கை நெறிகளை ஆணைக்குழுவினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். அதில் முக்கியமாக மொழியியல், ஆங்கில இலக்கியம் (யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரை உயர் வகுப்பில் அதனைக் கற்பிப்பது மிகமிகக் குறைவு) சைவ சித்தாந்தம், தொல்லியல், மனைப் பொருளியல், மெய்யியல், உளவியல் என்பவை குறிப்பிடத்தக்கவை. விசேடமாக மனைப்பொருளியலைப் பொறுத்தவரையில் இதுவரை கலைப்பிரிவு மாணவர்களுக்கே இத்தகைய அனுமதி முறையில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினர் விஞ்ஞான பிரிவினரையும் இக்கற்கை நெறிக்குள் உட்படுத்த வேண்டும். இதற்கு ஆவன செய்யவேண்டியது பாடசாலைகளும் பல்கலைக்கழக சமூகத்தினருமே ஆகும்.

எனவே, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு நடைமுறையில் உள்ள பாடங்களை மட்டுமல்லாமல் வாழ்க்கைக்கு உகந்த செயற்பாடுகளைக் கொண்ட மனைப்பொருளியல் போன்ற பாடங்களை பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் கற்பிக்க முயற்சி எடுக்கவேண்டும்.

அதன்மூலம் பல்கலைக்கழகம் செல்ல [illegible] என்று ஏங்கித்தவிக்கும் மாணவர்களை அரவணைத்து இத்தகைய மார்க்கத்தில் செல்ல வழிகாட்டமுடியும்.

## கல்விச்சாலைக் காட்சிகள்



பெரிய விளான் றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது, மாணவர்கள் இறை வணக்கப் பாடலைப் பாடுவதைப் படத்தில் காணலாம். பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட உரும்பிராய் பங்குத் தந்தை அருட்திரு.அன்ரனி பாலா அடிகள், கிராம அலுவலர் சு.சூரியகுமார், பாடசாலை அதிபர் திருமதி கோ.பி.பியன்வெனு ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-135)



கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டிகளை தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். வித்தியாலய அதிபர் சோ.ஶ்ரீகாந்தன், உபஅதிபர் திருமதி தெ.துரைசாமி ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ)



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகளை பிரதம விருந்தினரான வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினரான ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் எஸ்.வல்லிபுரம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் அதிபர் க.செல்வக்குமாரன், உபஅதிபர் ச.பிரணதார்த்திகர சர்மா, விளையாட்டு உதவியாளர் ஈஸ்வரலிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-152)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகளின் 'விடிவைத் தேடி' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உயர் வகுப்பு மாணவர் மன்றப் பொருளாளர் செல்வி கவிதா ஶ்ரீஸ்கந்தராஜா உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

வெளியீட்டுரை நிகழ்த்திய இளைப்பாறிய அதிபர் திருமதி ஆர்.ஆறுமுகம், கல்லூரி அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன், உயர் வகுப்பு மாணவ மன்றத் தலைவி எஸ்.வினோதிகா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

ஆனந்தன்வடலி வீதி, கொழும்புத்துறை, புகையிரதப்பாதை இருந்த இடத்திற்கு அருகில் 2 1/2 பரப்பு வெறுங் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சோ.சிவசுந்தரம், 272, ஆனந்தன்வடலி வீதி, அரியாலை. T.P.: 0777-293265. (18625)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975ஆம் ஆண்டு, பரணி, செவ்வாயற்ற U.K.இல் தொழில் புரியும் நிரந்தர வதிவுரிமையுடைய B.Sc. computer Science படித்த மணமகனுக்கு 1978இற்குப் பின் பிறந்த படித்த, அழகான, நற்குணமுள்ள பாவமற்ற மணமகள் தேவை. (பட்டதாரிகள் விரும்பத்தக்கது) தொடர்பு: விள.இல.1907, மே/பா உதயன். (18658)

## O/L Maths

ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 38 வருட கால அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் A பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும். சந்திக்கும் நேரம்: காலை 6.00 - 9.00. தொடர்பு: க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (18642)

## திருமண சேவை

1970ஆம் ஆண்டு, கிரகபாவம் 50 உள்ள கனடா பிரஜாவுரிமை பெற்ற பொறியியலாளரும் மற்றும் டாக்டர், பட்டதாரிகள், கணக்காளர், லிகிதர், வர்த்தகர்கள், வெளிநாட்டு பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் எம்மிடம் உள்ளனர். தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, 298, கோயில் வீதி, நல்லூர். (18636)

## கால்நடை வைத்திய அலுவலகம் இன்று திறப்பு

வலி.கிழக்கு,ஜுன்2

கோப்பாய் பூதர்மடப்பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கோப்பாய் அரசினர் கால்நடை வைத்திய அலுவலகத் திறப்புவிழா இன்று காலை 10மணிக்கு கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி செ.வினோசுந்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் பொ.இராமநாதன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனும், முன்னாள் கால்நடை உற்பத்தி சுகாதார உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி ஞா.சிவபாதசுந்தரம், கோப்பாய் பிரதேச செயலர் ச.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இதுவரை காலமும் நீர்வேலியில் தனியார் கட்டடத்தில் இந்த அலுவலகம் இயங்கி வந்தது. தற்போது கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் ரூ.26 லட்சம் செலவில் கட்டி அமைக்கப்பட்டுள்ளது.

(எ-180)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

19.05.2003 அன்று முகமாலை சோதனைச் சாவடியில், "திருமதி இராமச்சந்திரன், நரேன் பிட்டிய" என்ற குறியுடன் பயணப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு:

சு.இராமச்சந்திரன்
தாமரைக்குளத்தடி,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.
T.P.: 070 212857
(சி-28195)

## வேலையாள்கள் தேவை

பலசரக்கு கடைக்கு நல்ல அனுபவமுள்ள வேலையாள்கள் உடன தேவை. அத்துடன் சமையலுக்கு ஒரு பெண் தேவை. நல்ல சாப்பாடும், சம்பளமும் தரப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

தனபாலசிங்கம்
19, முருகேசர் ஒழுங்கை,
(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)
முத்திரைச்சந்தையடி, நல்லூர்.
(18579)

# முன்பள்ளி மாணவருக்கு மட்டுவிலில் இலைக்கஞ்சி

தென்மராட்சி,ஜுன்2

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் போசாக்கு வழங்கும் திட்டத்தின்கீழ் மட்டுவில் பகுதியில் உள்ள 10 முன்பள்ளிகளில் கல்வி பயிலும் 230 மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கவுள்ளனர்.

இம்மாதம் முதல்வாரம் தொடக்கம் இந்தத் திட்டம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலைக்கஞ்சி தயாரிக்கும் உபகரணங்கள், வழங்கும் பொருள்கள் ஆகியவையும் ஒவ்வொரு முன்பள்ளிக்கும் வழங்கப்படவுள்ளதாகக் கழகச் செயலாளர் க.சற்குணதேவன் தெரிவித்தார்.

(எ-117)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

02.06.2003

HAPPY



BIRTHDAY

### செல்வன் ர.சரீஸ்

இலந்தைக்காடு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த
திரு.திருமதி ரவீந்திரன் - நிர்மலா தம்பதிகளின்
அருந்தவப் புதல்வன்

### செல்வன் ர.சரீஸ்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (02.06.2003) திங்கட்கிழமை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, கனடாவில் இருக்கும் சித்தப்பாவான யோகேஸ்வரன், அக்கா வர்சா மற்றும் சித்தப்பாமார், அத்தைமார், அன்ரிமார், அப்பப்பாமார், மாமாமார், அன்ரிமார், அக்காமார், உற்றார், உறவினர் அனைவரும் இலந்தைக்காடு ஸ்ரீ வைத்தீஸ்வரர் அருள்பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சுகமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*இலந்தைக்காடு,*
*வல்வெட்டித்துறை.* (18661)

தகவல்:
மு.விஜிகரன் (சித்தப்பா).

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின்
நல்லாசிரியர்
*திருமதி சா.தங்கேஸ்வரானந்தம்*
அவர்களின் பாசமிகு தந்தையார்
அமரர்

### கணபதிப்பிள்ளை கந்தையா

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவர்களின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.
(18664)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில் 12 - 06 - 1951



ஆண்டவன் நிழலில் 04 - 05 - 2003

### திருமதி கணேசபாக்கியம் ஈஸ்வரநாதன்

எமது குடும்பத்தலைவியின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (03.06.2003) செவ்வாய்க்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் கலந்துகொள்வதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தயவுசெய்து இந்த அழைப்பை தனி அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ரவீன்ஸ் ரெலிக்கொம்
சிங்கத்தின் வீடு.
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
T.P. : 070 - 212408
021 - 2263321

கணவர்: ப.ஈஸ்வரநாதன் (ஆசிரியர்)
பிள்ளைகள்: கோபிநாத், ரவீந்திரநாத்
சகோதரர்கள்: ச.சிவனேசராசா
(Eng. RDA JAFFNA)
ச.அருள்நேசன் (லண்டன்)
(Rtd. ARM PEOPLES BANK, JAFFNA.

# நடமாடும் மருத்துவ சேவை

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையால் மீண்டும் நடமாடும் வைத்தியசேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்காக 2 கோடி 20லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நடமாடும் வைத்திய சேவை வடமராட்சி கிழக்கில் மருதங்கேணியிலும் மண்டைதீவு, புங்குடுதீவு, தோப்பு ஆகிய இடங்களிலும் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-31)

## வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா 06.06.2003

அம்பாள் அடியார்களே!

அம்பாளின் பொங்கல் விழா எதிர்வரும் (06.06.2003) வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெறும். அன்று நண்பகல் அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் ஆராதனையும் இரவு பொங்கல் விழாவும் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அன்போடு அறியத்தருகின்றோம்.

*அனைவரும் வருக! திருவருள் பெறுக!!*

ஆலய திருப்பணிச் சபையினர்,
வன்னி விளாங்குளம்,
மாங்குளம்.
(18603)


# SHAMEERA'S

## (ஷமீராஸ்)

## Herbal Beauty Care

Professional Service Offered

- Bridal Dressing
- Dance Make up/Party make up
- Gold, Silver & Pearl facial
- Fruit, Flower & Herbal facial
- Thermo Herbal facial
- Herbal treatment for Dandruff, Hair fall, Pigmentation,Pimples,Open pores, Under eye treatment, Dark circle & Black neck

(முகப்பரு, கரும்புள்ளி அகற்றல், மங்கு, மரு, முடி உதிர்தல், இளநரை, கருவளையம் போன்றவற்றிற்கான சிகிச்சையும் ஆலோசனைகளும் வழங்கப்படும்)

- Hair colouring chemical
- Hair cuts
- Skin lightening treatment
- Manicure & Pedicure
- Threading & Waxing Multi colour mehandhi designing & tattooing

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.

செல்வி தி.சர்மிளா,
பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
தலையாளி, கொக்குவில்.
0777-190774

செல்வி மீரா கிருஷ்ணன்,
40/3 கோவில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
0777-198698
021-222 2472

(18647)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி முருகேசு பாறுவதி

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் காரைநகர், கோவளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு பாறுவதி நேற்று (01.06.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு முருகேசுவின் அன்பு மனைவியும் தனலட்சுமி, காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், மகேஸ்வரன் மற்றும் அன்னலட்சுமி, மகேந்திரன், மகாலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் சங்கரப்பிள்ளை (சங்கரப்பிள்ளை அன்சன்ஸ் உரிமையாளர்), யோகேஸ்வரி, தனலட்சுமி, பாலச்சந்திரன், வனஜா, கணேசபிள்ளை ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தங்கமுத்து மற்றும் செல்லம்மாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2003) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோவளம்,*
*காரைநகர்.* (18663)

தகவல்:
பொ.பாலச்சந்திரன்.

## யோசேப் திருஞானம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

சுன்னாகம், புனித அந்தோனியார் கோயிலடியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் யோசேப் திருஞானம் 31.05.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் ஞானசீலன் (யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை), டார்வின் (விஞ்ஞான ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி), ஞானறோஜினி (B.F.A.), றெகென்சியா (சித்திரமும் வடிவமைப்பும் யாழ்.பல்கலைக்கழகம், 4ஆம் வருடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மொறீன் (ஆசிரியை, மன்/கள்ளியடி, அ.த.க. பாடசாலை, இலுப்பைக் கடவை), டொமினிக் ஜீவா (ஓவிய ஆசிரியர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யூசிறே சியாயின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.06.2003) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நல்லடக்க ஆராதனையின் பின்னர் சுன்னாகம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*புனித அந்தோனியார் வீதி,*
*சுன்னாகம்.*
(18362)

தகவல்:
குடும்பத்தினர், டார்வின்
(விஞ்ஞான ஆசிரியர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ !
இலங்கை மின்சார சபையின்
இலகு தவணைக் கடன் மூலம்
யாழ்ப்பாண
மின் பாவனையாளர்களுக்கு
CFL மின்குமிழ்கள்

நன்மைகள்
- CFL மின்குமிழ்களைப் பாவிப்பதால் மின் கட்டணம் குறையும்.
- ஆரம்பக் கொடுப்பனவுகள் இல்லை.
- வட்டியில்லாத கடன்
- 12 மாதத் தவணை முறையில் கடனைச் செலுத்தலாம்.
- மின் குமிழ்களுக்கு ஒரு வருட உத்தரவாதம்




CFL மின்குமிழ்கள் சக்தியுடன் உங்கள் பணத்தையும் சேமிக்கச் சிறந்த வழி

விபரங்களுக்கு
பிரதேச மின் பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)
இலங்கை மின்சார சபை
சுன்னாகம்.
தொலைபேசி: 021-2223002, 070-212261



இதோ வெளிவந்து விட்டது!
வாங்கிப் படியுங்கள்!!
பாஷையூர் புலவர் செகராசசிங்கம் அவர்கள் எழுதிய
**தண்டமிழ்த் தண்டலை**
எனும் இனிய தமிழ்ப் பூங்கா!
இந்நூல் சிறுவர்களுக்கு கலை வளர்ச்சியையும் மன மகிழ்ச்சியையும் உளவெழுச்சியையும் இன்ப நுகர்ச்சியையும் ஊட்டவல்லது. அத்துடன் வளர்ந்தவர்கள் படித்து ரசித்து உரையாடி மகிழவும் அறிஞர்களின் அறிவுரைகளை அறியவும் சிறந்த நூல்.
கிடைக்கும் இடங்கள்:
உள்ளூரிலும், யாழ்.பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(18510)


உ
ஐங்கரன் துணை

## இணுவில்
## அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் இரதோற்சவ விஞ்ஞாபனம்

**ஐங்கரன் அடியார்களே!**

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் வைகாசி மாதம் 19 ஆம் நாள இன்று (02.06.2003) திங்கட்கிழமை இரதோற்சவம் சிறப்புற நடைபெறவுள்ளது.

**காலை 5.00 மணி - பூஜை**
**காலை 5.15 மணி - அபிஷேகம்**
**காலை 6.00 மணி - பூஜை**
**காலை 7.00 மணி - வசந்த மண்டபபூஜை**
**காலை 8.00 மணி - சுவாமி எழுந்தருளல்**
**மாலை 4.00 மணி - சுவாமி இரதத்தில் இருந்து இறங்குதல்**
**மாலை 5.30 மணி - இராஜபிடேகம்**

இவ்விழாவில் நாதஸ்வர தவில் கலைஞர்களாக S.சிவகரன் குழுவினர்.
நாதஸ்வர கான கலாநிதி N.K.பத்மநாதன் குழுவினர்.
நாதஸ்வர கலாபூசணம் K.R.சுந்தரமூர்த்தி குழுவினர்.
நாதஸ்வர கானபூபதி V.K. பஞ்சமூர்த்தி குழுவினர்.
நாதஸ்வர கலைமணி N.R. கோவிந்தசாமியின் புதல்வர்கள்
N.R.K. இரட்ணகுமார்
N.R.K. வாகீஸ்வரன் குழுவினர்.
தவில் மேதை V. தெட்சணாமூர்த்தியின் புதல்வர் V.T. உதயசங்கர்.
தவில் மேதை N.R. சின்னராசாவின் புதல்வர்கள்
N.R.S. ரவீந்திரன், N.R.S.சுதாகரன் சகோதரர்கள்

*தென்னிந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள கலைஞர்கள்*

**நாதஸ்வர இசைமாமணிகள்**
கடம்பர் கோவில K.R.அன்பழகன்
சின்னம்மனூர் N.A. கார்த்திகேயன்
இடும்பாவனம் E.V.இளையராஜா
கடிச்சம்பாடிசகோதரர்கள் K.P.பாலமுருகன்
K.P .ஸ்ரீநிவாசன்

**தவில் இசைமாமணிகள்**
திருச்சிமலைக்கோட்டை A.அசோக்குமார்
திருச்சிமலைக்கோட்டை S.செந்தில்குமார்
திருச்சிதொட்டிபம் S.கண்ணன்

ஆகியோர் சிறப்பிப்பார்கள்.
*அனைவரும் வருக! திருவருள் பெறுக!!*

இங்ஙனம்
தேர்த்திருவிழா
உபயகாரர்கள்.

(சி-28189)


சுவையுங்கள்

உடன் கரையும் பால்... என்றும் சௌகரியமான பால்






அறிமுகமாகிறது... மில்குறோ. புரட்சிகரமான இந்த முழு ஆடைப் பால் மா உடனடியாகவும் முழுமையாகவும் கரைவதால் துகள்களோ கட்டிகளோ இருக்கமாட்டாது. சுவை நலத்தை மட்டுமே தரும். மில்குறோ போஷாக்கு மிக்கது. உங்கள் பிள்ளைகளின் பலமான, நலமான வளர்ச்சிக்கு அத்தியாவசியமான விட்டமின் A மற்றும் D3 என்பன நிறைந்தது. உடனடிக் கரைவு. உடனடிச் சௌகரியம். உடனடி நம்பிக்கை. உங்கள் குடும்பத்திற்கு மில்குறோ போஷாக்கை வழங்குங்கள்.

மில்குறோ®
தற்கால மகளிருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவுடனான போட்டியில் மேற்கிந்திய அணிக்கு மீண்டும் வெற்றி

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் 6 ஆவது போட்டியில் 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மே.இ.தீவுகள் அணி வெற்றி பெற்றது. நேற்று முன்தினம் இப்போட்டி நடைபெற்றது.

மே.இ.தீவுகளின் சுழல் பந்து வீச்சாளர்களால் கட்டுப்படுத்தப்பட்ட ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியபோது 50 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் 252 ஓட்டங்களுடன் இழந்தது.

அடுத்து விளையாடிய மே.இ.தீவுகள் அணியில் ஹிண்ட்ஸின்(125) அபார சதமும், சர்வானின்(50) பொறுப்பான ஆட்டமும் மே.இ.தீவுகளுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தன. இதனால 48.4 ஆவது ஓவரில் 254 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மே.இ.தீவுகள் அணி வென்றது.

மே.இ.தீவுகளின் வெற்றிக்கு முக்கியகாரணமாக இருந்த வேவல் ஹிண்ட்ஸ் 140 பந்துகளை எதிர்கொண்டு 5 பவுண்ரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட 125 ஓட்டங்களை எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இப்போட்டியில் ஆஸ்திரேலிய அணியில் அதிகபட்ச ஓட்டங்களை (64) எடுத்தவர் கில்கிறிஸ்ட்.

மே.இ.தீவுகள் அணியில் கைல் 3 விக்கெட்டுக்களையும் ஹொலிமோர், சாமுவேல் இரு வரும தலா 2 விககெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பெவல் ஹிண்ட்ஸ இப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக தெரிவானார். தொடர்ச்சியாக 21 போட்டிகளில வென்று வெற்றி நடைபோட்டு வந்த ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கு 5 ஆவது ஒருநாள் போட்டி யில் மே.இ.தவுகள்அணி முற்றுப்புள்ளி வைத்தது.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற இந்த 6 ஆவது போட்டியிலும் தோல்வியுற்றிருப்பது ஆஸ்திரேலிய அணிக்கு எச்சரிக்கை மணி அடித்திருப்பதாகரிக்கிபொன்ரிங் தெரிவித்துள்ளார்.

7 ஒருநாள் போட்டிகள் கொண்ட இத்தொடரில் 4-2 என்ற நிலையில் ஆஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது.

(ஒ)



# ஒரே பந்தில் 11 ஓட்டங்கள்! கிரிக்கெட்டில் புதிய சாதனை!!

இங்கிலாந்து பிராந்திய அணிகளுக கிடையிலான போட்டியொன்றில் யோர்க்ஷயர் அணி வீரர் ரியான் சைட்பொடம் ஒரு பந்துவீச்சில் 11 ஓட்டங்களைக் கொடுத்தார்.

கிரிக்கெட் போட்டிகளில் இது ஒரு புதிய சாதனையாகக் கருதப்படுகின்றது. ஹெடிங்லேயில் நடைபெற்ற கிளமோர்கன் அணியுடனான போட்டியிலேயே இச்சாதனை நிகழ்த்தப்பட்டது.

இப்போட்டியில் சைட்பொட்டம், தனது முதலாவது ஓவரை வீச ஆரம்பித்து, தொடர்ச்சியாக 5 வைட்களைக் கொடுத்தார். அதன் பின் அவர் வீசிய பந்தில் கிளர்மோர்கன் வீரர் மத்தியூ மேனாட் சிக்ஸர் அடித்தார். அதையடுத்து அவர் உபாதை காரணமாக பந்துவீச்சில் இருந்து ஓய்வுபெற்றார்.

இதனால் 0.1 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களைக் கொடுத்த வரரானார் சைட்பொட்டம். இதற்கு முன்னர் 1900 ஆம் ஆண்டு சி.ஜே.பர்னிப் வீசிய ஒரு பந்தில் வூட் எனும் வீரர்10 ஓட்டங்களைப் பெற்றமையே சாதனையாக இருந்தது.

கிளர்மோர்கன் அணியுடனான போட்டியில் சைட் பொட்டமின் மேற்படி ஓவரை கெரி.'.பொலோஸ் பூர்த்தி செய்தார். அவரும் ஒன்பது ஓட்டங்களைக் கொடுத்தார். இதனால் மேற்படி ஓவரில் கிளமோர்கன் அணிக்கு 20 ஓட்டங்கள் கிடைத்தன.

இப்போட்டியில் டக்வோர்த் லூயிஸ் முறையில் கிளமோர்கன் அணி 4 விககெட்டுக்களால் வெற்றிபெற்றது.

25 வயதான ரியான் சைட் பொட்டம் ஒருநாள் சர்வதேச போட்டிகள் இரண்டிலும் டெஸ்ட் போட்டி ஒன்றிலும் பங்குபற்றியுள்ளார்.

(ஒ)

# விளையாட்டு

## நடிகராகிறார் ஸ்ரீகாந்த்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த், புதிதாக தயாராகும் தமிழ் திரைப்படத்தில் நடிக்கிறார்.

இந்தியகிரிக்கெட்டில் அதிரடிக்கு பெயர் பெற்றவர் ஸ்ரீகாந்த். தமிழக வீரரான இவர் இந்திய அணியின் தலைவராகவும் இருந்திருக்கிறார். ஓய்வுக்குப்பிறகும் கிரிக்கெட் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தி வந்தவர் இவர்.

தற்போது மாதவன் கதாநாயகனாக நடிக்கும் 'பிரியமான தோழியே' என்ற புதிய தமிழ்ப்படத்தை ஏ.வி.எம். நிறுவனம் தயாரித்து வருகிறது. இந்தப்படத்தில் கிரிக்கெட் பயிற்றுநராக அவர் நடிக்கிறார்.

"தொடர்ந்து சினிமாவில் நடிக்கும் ஆர்வம் இல்லை. கிரிக்கெட் பயிற்றுநர் வேடத்தில் நடிக்குமாறு ஏ.வி.எம். நிறுவனம் வற்புறுத்திக்கேட்டதால் மட்டுமே இதற்குச் சம்மதித்தேன். தொடர்ந்து நடிக்கும் ஐடியா எதுவும் இல்லை." என்று கூறுகிறார் ஸ்ரீகாந்த்.

கிரிக்கெட் வீரர்களில் சலீம் துரானி, சுனில் கவாஸ்கர், சந்திப்பட்டேல், சையத்கிர்மானி, அஜய ஜடேஜா, ஆகியோர் ஏற்கனவே சினிமாவில் 'தலை' காட்டியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வீரர்களின் சம்பளம் குறைப்பு: ஆனால் திறமை அடிப்படையில் ஊக்கப் பரிசு

இலங்கை வீரர்களின் சம்பளத்தை இலங்கை கிரிக்கெட் சபை குறைத்துள்ளது. ஆனால், திறமை வெளிப்பாட்டின் அடிப்படையில் அணிக்கு ஊக்கத்தொகை வழங்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் வீரர்களின சம்பளத்தில் 30 சதவீதத்தை குறைத்துள்ள இலங்கைக் கிரிக்கெட் சபை அணியின் ஒப்பந்த வீரர்களின் எண்ணிக்கையை 15 இலிருந்து 12 ஆகவும் குறைத்துள்ளது.

முந்தை வருடத்துடன் ஒப்பிடும் போது 2002 ஆம் ஆண்டில் இலங்கை கிரிக்கெட் சபைக்கு சுமார் 28 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் இலங்கையில் மிகக் குறைவான சுற்றுப் போட்டிகள் நடைபெற்றமையே இதற்குக் காரணம். இந்தத் தகவலை கடந்தவாரம் கிரிக்கெட் சபை வெளியிட்டிருந்தது. இந்த இழப்பின் காரணமாக நிதி நெருக்கடிக்கு தள்ளப்பட்டதால், இதனை ஈடுகட்டுவதற்கு கிரிக்கெட் வீரர்களின் சம்பளத்தை கிரிக்கெட் சபை குறைத்துள்ளது.

அதன்படி ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள 12 வீரர்களுக்கு கடந்த ஆண்டு வழங்கப்பட்ட சம்பளத்தில் 70 சதவீதமே இந்த ஆண்டு வழங்கப்படவுள்ளது.

டெஸ்ட் போட்டிகளுக்கு 1,750 டொலர்களும், ஒருநாள் போட்டிகளுக்கு 1,250 டொலர்களும் சம்பளமாக வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, போட்டிகளில் பெறும் வெற்றிக்கும் 500 டொலர் போனஸ் வழங்கப்படவுள்ளது.

மேலும் தரவரிசையில் முதல் 4 இடங்களில் உள்ள அணிகளுக்கு எதிரான போட்டிகளில் வெற்றி பெற்றால் சம்பளத்தொகை 50 சதவீதம் அதிகரிக்கப்படும். 5 முதல் 8 இடங்களில் உள்ள அணிகளுக்கு எதிரான போட்டியில் வென்றால் சம்பளத்தில் 25 சதவீதமும் அதிகரிக்கப்படும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்2

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இரணடாம் சுற்று ஆட்டம் இன்று திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு திக்கமுனை மைதானத்தில் இடம்பெறவுளளது.

இவ்வாட்டத்தில் நாவலர் விளையாட்டுக்கழக ஏ அணியும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக ஏ அணியும் மோதுகின்றன.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்2

பருத்தித்துறை 'லீக்' கழகம் இம்மாதம் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் நடைபெறும் இப்போட்டியில் பங்கேற்க விரும்பும் கழகங்கள் விண்ணப்பப்படிவங்களை அப்பகுதி உதைபந்தாட்ட லீக் கழக செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளுமாறு இக்கழக பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.


**கலைச்சுடர் சனசமூக நிலையத்தினரால்**

நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பின்

அதிர்ஷ்ட இலக்கங்கள்

| | |
|---|---|
| முதலாம் பரிசு | =>988 |
| இரண்டாம் பரிசு | =>1269 |
| மூன்றாம் பரிசு | =>4,469 |

(18675) - நிர்வாகத்தினர்.

உ

**இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவில் தீர்த்த மஹோற்சவம்**

**நிகழும் சுபானு வருடம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் 03.06.2003 செவ்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். இந்நிகழ்வில் இலங்கை,இந்திய நாதஸ்வர, தவில் வித்துவான்களும் கலந்து கொள்வார்கள்.**

அடியார்கள் வருக! ஐங்கரன் திருவருள் பெறுக!!

(18668) - தீர்த்த உபயகாரர்கள்



உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

**மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் வைகாசித் திங்கள் 19 ஆம் நாள் இன்று (02.06.2003 ) திங்கட்கிழமை காலை வரும் சுபவேளையில்.



**ஸ்ரீ முருகன் நகை மாடம்**

என்னும் புதிய வியாபார ஸ்தாபனத்தை வட்டுக்கோட்டை, சங்கரத்தைச் சந்தியில் நாம் ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் சமுகமளித்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வலிகாமம் வாழ் மக்களின் நலன் கருதி உங்களது மனதைக் கொள்ளை கொள்ளும் வகையில் நவீன பாணியில் புதியரக தங்க ஆபரணங்களைச் செய்து கொள்வதற்கு நீங்கள் நம்பிக்கையாக நாடவேண்டிய ஸ்தாபனம் இது என்பதை அறியத்தருகின்றோம்.

தலைமையகம்:சிவமகாலட்சுமி நகை

கிளை: ஓம் முருகன் நகைமாடம்

5, மானிப்பாய் வீதி, கைதடிச்சந்தி, கைதடி. (சி-28200) திரு.பா. மூர்த்தி (உரிமையாளர்)


# மரண அறிவித்தல்கள்

## C.E.குணரட்ணம்

**(ஓய்வுபெற்ற ஆளணி உத்தியோகத்தர், சிமெந்துக்கூட்டுத்தாபனம்)**

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட C.E.குணரட்ணம் நேற்று 01.06.2003 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரேசம்மா(தவமணி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லையா - ஜோர்ஜியானாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஜோன் பிலிப் - லூசியாவின் அன்பு மருமகனும் அன்ரன் (பின்லாந்து), காலஞ்சென்ற லயனல், ஆஸ்திரேலியாவில் வதியும் லூசியா (தங்கா), ரஞ்சன், பிக்னெல், சுரேஷ், லக்ஸ்மன், லெஸ்லி (கனடா). லரிசா - லலினி(பிரான்ஸ்)ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.ஆனந்தராஜா
*(சகலன்)*

*854, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(18673)

## சின்னத்துரை. நாகராசா (ஆச்சாரி)

கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகராசா நேற்று முன்தினம் சனிக்கிழமை (31-05-2003) இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - ராசம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும்,பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் சரோஜினி தேவி, நாதன், இந்திராதேவி, கமலேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கவடிவேல், கலா, இலங்கைராசா, காந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெகன், விஜிதா, றஜிதா, சுஜிதா, பகீதரன், தினேஸ், தனுஜா, புவிராஜ், அமல்ராஜ் ஆகியோரின் பேரனும், பாக்கியத்தின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02-06-2003) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.நாதன் (மகன்)
*(துர்க்கா கடைச்சல் தொழிலகம்)*

*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*
(18669)

## திருமதி செல்லத்துரை யோகரத்தினம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் தெற்கு, ஸ்ரான்லிக் கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை யோகரத்தினம் 31.05.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் திருநாவுக்கரசு (வாழைக்குலை வியாபாரி), கனகலிங்கம் (பாய்க் கடை பவா,சுவிஸ்) கணேசலிங்கம் (கராட்டி மாஸ்ரர்,லண்டன்), திருமதி செல்வராணி, காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் திருமதி தர்மலோஜினி, அமிர்தலிங்கம்(பிரான்ஸ்) நடராஜலிங்கம் (லண்டன்), சாந்தலிங்கம் (பிரான்ஸ்), திருமதி கமலலோஜினி(கனடா), திருமதி சாந்தலோஜனா (கனடா), பரமலிங்கம்(ராஜன்ஸ் வீடியோ) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இலட்சுமி, திருச்செல்வி, ஈஸ்வரி(சுவிஸ்), ரஜனி(லண்டன்), சண்முகராசா(சாரதி), இந்திரா, லோகநாதன்(பாய்க்கடைமாலா,லண்டன்), சுசி(பிரான்ஸ்), பவா(பிரான்ஸ்), வீரசிங்கம்(கனடா), சிவகுமார்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(2.06.2003) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*இல.5/1, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,*
*நல்லூர் தெற்கு,*
*யாழ்ப்பாணம்.*
(18670)

தகவல்:
மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3664286 இருந்து
3680920 வரை
சீட்டிழுப்பு இல. 1405
திகதி 31.05.2003

## வெற்றி எண்கள்

**08 20 24 44 48**

போனஸ் எண் **57**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.1,500,000/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 110 | 10,000/- | 1,100,000/- |
| 3 | 5,281 | 500/- | 2,645,500/- |
| 2 | 87,689 | 20/- | 1,753,780/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 08ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 107,104 | 10/- | 1,071,040/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,870,320/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா. 2,328,800/-**

தொடர் இல. 2683253க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஜூன் 4ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3675629-6-03
3674474-3-88
3679922-2-07
3679540-6-07
3665561-9-03

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 478 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 30.05.2003 | செல்லுபடியாகும் தொடர் இல. 5932980-5946234 | |

வெற்றி இலக்கங்கள் **17 21 24 33**

லக்கினம்
கன்னி



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,668,850/-
வெல்லப்பட்டது

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 291,171 | 10 | 2,911,710 |
| 2 இலக்கங்கள் | 26,708 | 20 | 534,160 |
| 1 இல + லக்கினம் | 26,578 | 30 | 797,340 |
| 2 இல + லக்கினம் | 2,435 | 100 | 243,500 |
| 3 இலக்கங்கள் | 729 | 500 | 364,500 |
| 3 இல + லக்கினம் | 49 | 5,000 | 245,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,668,850 | 1,668,850 |
| மொத்தம் | 347,674 | - | 7,065,060 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,065,060/-

தொடர் இல. 4956560க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஜூன் 03ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5936782-5-69
5940270-9-14
5942343-8-38
5938671-9-92
5934490-5-14

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



# சுடர் ஒளி

## 08.06.2003 இதழில்

விலை 16 /=




- புலிகள் கேட்டது ஒன்று
  அரசு வழங்க முன்வந்தது வேறொன்று.
- மாற்றான்தாய் மனப்பான்மையுடன் அரசு,
  ஏற்றங்களின்றி இடருறும் யாழ். மக்கள்.
- சோனியாவுக்கும் ஜெயலலிதாவுக்கும்
  கறுப்பு பூனை பெண்படை பாதுகாப்பு.
- றோ அதிகாரியின் திடீர் பிரசன்னம்
  யாழ். மக்கள் மனங்களில் சந்தேகம்.
- தலைநகரில் அரங்கேறிய படுகொலை.
- எவரெஸ்ட்: வானத்தின் வெற்றியைத் தொட்ட
  மனுக்குலத்தின் இமாலய வெற்றி.
- பரிசு பத்தாயிரம்
  நகைச்சுவை விருந்து.

மற்றும் அரசியல் அம்பலம், அதிசயம் ஆனால் உண்மை, சினிமா, விளையாட்டு, இளஞ்சுடர், மசாலா மிக்ஸ், பித்தன் பதில்கள், கவிதைப்புனல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர், மாணவர்கள் மத்தியில் தமிழ்த்திறன் குறைந்து செல்கிறது

## கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்2

ஆசிரியர், மாணவர்களின் தமிழ் மொழித்திறன் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இதனைத் தமிழ்ச் சமுதாயம் இன்னமும் புரிந்துகொள்ளவில்லை - அறிந்துகொள்ளவில்லை.

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் கிழக்குப் பல்கலைக்கழக மொழியியற்றுறைத் தலைவர் கலாநிதி செ. யோகராசா

யாழ்.றோட்டறிக்கழகம் ஏற்பாடு செய்த இராப்போசன நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 'உதயன்' கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கலாநிதி யோகராசா தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய சூழலில் மாணவர்களின் கல்வித்தரம் வெகுவாக வீழ்ச்சி அடைந்து வருகிறது. கல்வித்தரம் குன்றிவருவதற்கு பெரும் பாத்திரவாளிகளாக விளங்குபவர்கள் ஆசிரியர்களே. ஏனெனில், இன்று கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களில் அனேக மானவர்கள் தமிழ்மொழி அறிவு குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

அண்மையில் நடைபெற்று முடிந்துள்ள ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் தமிழ்மொழி விடைத்தாள் மதிப்பிடும் பணியில் நான் ஈடுபட்டேன். இதன் போது என்னால் மதிப்பீடு செய்யப்பட்ட 750 மாணவர்களுக்குரிய விடைத்தாள்களில் 5பேர் மட்டுமே 'ஏ' சித்திபெற்றுள்ளனர்.

இந்நிலை தமிழ் மொழியின் பரிதாப நிலையினைக் காட்டி நிற்கின்றது. அதிர்ச்சியினையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

அனேகமான ஆசிரியர்களுக்கு முறையான வகையில் தலைப்பிட்டு ஒரு கடிதம் எழுதத் தெரியாது. அனேகமான மாணவர்களுக்கு தமிழ்மொழி வாழ்த்தினைப் பார்க்காமல் பாடத்தெரியாது. இன்றைய இளந்தலைமுறையினரிடம் எழுத்தாற்றல் என்பது மிகவும் அரிதாகவே உள்ளது. மாணவர்களிடமும் எழுத்தாற்றல் மற்றும் பேச்சு, விவாதங்களில் ஈடுபடும் ஆர்வமும் மிகக்குறைந்த நிலையிலேயே உள்ளது.

ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரிய கலாசாலைகளில் அனேகமானவை விரிவுரையாளர்கள் அற்ற நிலையில் இயங்குவதால் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் தமிழ்மொழிப் பயிற்சியை முழுமையாக பெற்றுக் கொள்ளாமலேயே வெளியேறுகின்றனர்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி பெறும் பட்டதாரி ஆசிரியர்கள் கூட தமது ஆய்வுக்கட்டுரைகளை தமிழ்ச் சமூகத்துக்குத் தேவையான புரையோடிப்போயுள்ள தமிழ் மொழிப் பிரச்சினைகளை ஆய்வு செய்யாமல் தேவையற்ற தலைப்புகளில் ஆய்வுசெய்து கட்டுரைகளைச் சமர்ப்பிக்கிறார்கள். இதனால் என்ன பிரயோசனம்?

எனவே, தொடர்ந்தும் காலத்தை தாழ்த்தாமல் ஆசிரியர்கள், அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் தமிழ்மொழியின் வீழ்ச்சி நிலையைக் கருத்தில் கொண்டு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

(எ-6)

## கைதடி ஆலயத்துக்கு நிதி ஒதுக்கீடு

கைதடி,ஜூன்2

யுத்த நடவடிக்கைகளினால் பலதத சேதமடைந்த கைதடி இலத்தை அருள்மிகு அண்ணமார் ஆலயக் கட்டட நிதிக்காக இந்து கலாசார அமைச்சு ரூபா 50ஆயிரத்தை வழங்கியுள்ளது. (எ-75)

## கட்டடத் திறப்பு விழா

கைதடி,ஜூன்2

தென்மராட்சி மேற்கு(கைதடி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலக புதிய கட்டடத் திறப்பு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு சங்கத் தலைவர் சி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.செ.கனகசபாபதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ-75)

# ஓராண்டு நினைவுக் கண்ணீர்ப்பூக்கள்





## சிவானந்தம் மதிமுகன்

தரம் 1 மாணவன், கிளி/பளை ம.ம.வி.

மண்ணில் : 12-09-96
விண்ணில் : 13-06-02
திதி : திருதியை 02-06-2003

## அமிர்தலிங்கம் துரைசிங்கம்

மண்ணில் : 17-02-1913
விண்ணில் : 21-07-2002

திதி : துவாதசி

### பிஞ்சுத்தளிர்

மதிமுகனாய், மலர்விழியாய்
மகிழ்வித்த மைந்தன் ஐயா
விடெங்கும் உன் வாசம்
வீதியெல்லாம் உன் கோலம்
ஊரெங்கும் உன் பேச்சு
வாழ்ந்துவிட்டு வாடவில்லை
வந்து விட்டு வாடிவிட்டாய்
தந்து விட்டு பறித்து விட்டான்
தவிக்க வைத்து துடிக்க விட்டான்
ஆண்பிள்ளை நீயெனக்கு
அம்மா நான் ஆசை வைத்தேன்
படிப்பாய் பட்டங்கள் பெறுவாய்
சான்றோனாய் சரித்திரங்கள் சமைத்திடுவாய்
ஈன்ற பொழுதிற் பெரிதுவக்க வென்றிருந்தேன்
ஆண்டொன்றைக்கூட அரைவாசி படிக்கவில்லை
மாண்டே மறைந்து விட்டாய்
பக்கத்துப் பிள்ளைகள் உன் பள்ளித் தோழர்
எப்பக்கம் பார்த்தாலும் எக்காள நடைபோட
அக்கினியாய் எரியுதடா அடிவயிறு துடிக்குதய்யா
மைந்தன் நீ வரவே மமதை கொண்டே மகிழ்ந்திருந்தேன்
வந்ததையா வருத்தமொன்று வாட்டி வதைத்திடவே
எத்தனை செய்தால் எழுந்திடுவாய் என்றே
அத்தனையும் செய்தேன் ஆகவில்லை கூடவில்லை
பறித்தென்னை எடுத்துவிட்டு பரிமளித்து நீயிருக்க
அந்தப் பரமனையும் கையெடுத்துக் கேட்டுவிட்டேன்
பாசமகன் போன பாதை பார்த்திருந்த பாவியடா
நேசமகனுக்கு நீட்டி நெருப்பு வைத்த நீசனடா
கோலவிளக்கே கொஞ்சு மொழியோடு
பிஞ்சுப் பாலகனாய் விஞ்சு விழியோடு
வந்து பிறப்பாயா எமை வாழ வைப்பாயா
அம்மம்மா அதிர்ந்து உடல் ஆடி விட்டார்
ஊனுருகி உருக்குலைந்து ஆகிவிட்டார்
அப்பம்மா ஆறவில்லை அமைதியில்லை
உள்ளுருகி உணர்விழந்துமாகி விட்டார்.

### பேரன்மார் பேசினர்

மதிமுகன் : அம்மப்பா துரைசிங்கம் : என்னய்யா மதிமுகா
மதிமுகன் : அம்மா அப்பா ஆரும் இல்லை
ஆறுதல் சொல்வார் ஆருமில்லை
தன்னந்தனியே வந்துவிட்டேன்
தவியாய்த் தவித்து ஏங்குகிறேன்
துரைசிங்கம் : மதிமுகனே என் மன்னவனே
மனம் குமுறிமாய்கின்றேன்
தினம் தினமே தேய்கின்றேன்
திகைத்திருந்து தேடுகின்றேன்
ஊன் இழந்தேன் உறக்கமில்லை
உனைக் காணும் உணர்வு கொண்டேன்

மதிமுகன் : அம்மப்பா! ஓடிவாருங்கள் ஒரு சொல் பேசுங்கள்
தேடித் திரிகின்றேன் தெரியப்படுத்துங்கள்
கூடிவாழ கொஞ்சம் உதவுங்கள்
ஓடி வாருங்கள் ஒரு சொல் பேசுங்கள்
துரைசிங்கம் : பேர் வைத்த பேரனடா உனைப் பெரிதாய் வளர்க்கவில்லை
ஓடி வருவேன் ஒன்றாய்ச் சேர்வோம்
கோடிகாலம் கூடி வாழ்வோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

### பழுத்தகனி

அமிர்தலிங்கம் துரைசிங்கம்
எங்கள் ஊர் அறிந்தபேர்
அவர் பேச்சறியும் எங்கள் ஊர்
வாழ்ந்தவர் வாழ்வை ரசித்தவர்
வாழ வைத்தவர் வாழ்வை வகுத்தவர்
மனைமாட்சி மங்கலம் கண்டவர்
மக்களைப் பெற்று மகிழ்ந்தவர்
அவரை மாண்புறச் செய்து மகிழ்ந்தவர்
மருமக்களை மக்களாக மதிப்பவர்
மாண்பு நலம் கொண்ட மாஞானி
உம்போல் உடல் படைத்தோர் ஊரில் உண்டு
உம்போல் மனம் படைத்தவர் இன்னுமில்லை அங்கு
எங்கில்லை நீர் பிரம்மமாய் எங்குமிருந்தீர்
மாட்டு வண்டிச் சவாரியா?
மாவீரனாய் அங்கு மகிழ்ந்திடுவீர்
சவாரி அப்பா என்றே சிறுவர் சால அழைத்திடுவார்
கோயில் கூட்டமா கொண்டாட்டம்தான் உங்களுக்கு
விளையாட்டுப்போட்டியா வீரன்தான் நீர் அங்கு
பள்ளிக் கூட்டமா
அள்ளிவரும் உங்கள் ஆவேசப் பேச்சு
சமயமா தத்துவமா சாதித்துவிடுவீரே
அள்ள குறையாது சொல்லி முடியாது
ஐயாவின் அகன்ற கதை பரப்பு.

'லிங்க[illegible]
நாகர்கோயில் வீதி, எழுதுமட்டுவாழ்.

அம்மா, அப்பா,
தங்கை சாம்பகி,
குடும்பத்தினர்.

(18666)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



## திருமதி நாகமுத்து சிவபாக்கியம்

நல்வழி வாழ்ந்து காட்டிய என் அன்னையே!
அன்புக்கரம் நீட்டி எமை அரவணைத்த எம் பாட்டியே!
பொறுமையுடன் அரவணைத்து எனை ஆதரித்த என்பூட்டியே!
ஏன் சென்றாய் எமை விட்டு வெகு தூரம்?
ஏக்கமுடன் தருகின்றோம் எம் கண்ணீரைக் காணிக்கையாய்!

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (18678)

உம் பிரிவால் துயருறும்:
மகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 03.11.1975



ஆண்டவர் மடியில் 03.05.2003

## திருமதி அன்ரனி ரெஜினோல்ட் வாசுகி

எங்கும் எதிலும் உன் நினைவுகள்தான் தெரிகிறது
ஏங்கும் எம்முகம் மறந்து சென்றதேனம்மா வாசுகி
எங்கள் உயிருடன் கலந்துவிட்ட தெய்வம் நீ
எம்மைத் தேடி நிற்கும் உன் திருமுகத்தை தேடுகின்றோம்
எம் இதய சுமையை இறக்குவது எப்போதம்மா?

கடந்த 03.05.2003இல் ஜேர்மனியில் காலமான
எமது அன்புச் செல்வத்தை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

*கலிகைச் சந்தி,*
*துன்னாலை தெற்கு,*
*கரவெட்டி.* (சி-28202)

குலசிங்கம் ஜெயராணி,
திருச்செல்வம் மீரா.

## அமெரிக்கஅதிகாரி இலங்கை வருகிறார்

கொழும்பு,ஜூன்2

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் (யு.எஸ்.எய்ட்) பிரதி நிர்வாகியான பெற்றிக் டபிள்யூஷீக் எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்கிறார். 7 ஆம் திகதி வரை அவர் இங்கு தங்கியிருப்பார்.

கொழும்பில் தங்கியிருக்கையில் அவர் அரசாங்க உயர் அதிகாரிகளையும் சிவில் சமூகப்பிரதிநிதிகளையும் சந்திப்பார். தெற்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடும் அவர் யாழ்ப்பாணத்தில் (யு.எஸ்.எய்ட்) நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் அவதானிப்பார்.

இலங்கை விஜயத்தின் பின்னர் அவர் ஜப்பானில் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெறும் இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டிலும் பங்குபற்றுவார்.

## அபேட்சகர் தெரிவுக்கு சு.க.குழு அமைப்பு

கொழும்பு,ஜூன்2

எதிர்காலத்தில் நடைபெறும் சகல தேர்தல்களுக்குமான அபேட்சகர்களை குழு ஒன்றின் மூலமே தெரிவு செய்வது என சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

இத்தீர்மானத்தை அடுத்து குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ, சு.க.பொதுச்செயலாளர் மைத்திரிபால ஸ்ரீசேன, எம்.பிக்களான அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, சரத் அமுனுகம ஆகியோர் அக்குழுவில் அடங்கியிருக்கின்றனர்.

விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதியானோர் மட்டும் இக்குழுவினால் அபேட்சகர்களாக தெரிவுசெய்யப்படுவர் என்று சரத் அமுனுகம தெரிவித்திருக்கிறார்.

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
**தி.றெக்கன்சியா ஞானவதனி**
அவர்களின் அன்புத் தந்தையார்

## ஜே.திருஞானம்

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

4 ஆம் வருட மாணவர்கள்,சித்திரமும் வடிவமைப்பும்
(18674) இராமநாதன் நுண்கலைக்கழகம், யாழ்.பல்கலைக்கழகம்.

# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து சிவபாக்கியம்

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சிவபாக்கியம் நேற்று (01.06.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்பு மனைவியும், யோகம்மாவின் அன்புத் தாயாரும், கந்தசாமியின்(ராஜா சலூன் உரிமையாளர்) அன்பு மாமியாரும் பத்மராஜா(டோகா), லலிதா(ஆசிரியை அச்சுவேலி மத்தியகல்லூரி), ஸ்ரீகாந்தன்(சவூதி), பத்மராணி, வரதராஜன்(டோகா), சசிகலா(டோகா), கமலராஜன்(டோகா), பிரியராஜன்(டோகா) ஆகியோரின் பேர்த்தியும், ஜனுக்சிஜாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை.* (18677)

தகவல்:
பத்மராஜா
*(பேரன்)*

## வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும் வரணி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை நேற்று (01.06.2003) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சி.சரஸ்வதிதேவியின் அன்புக் கணவரும் மாவீரர் சுரேஸ், திருமதி சுகந்தினி விக்கினேஸ்வரன், சுதர்சன் (சுதன் ஸ்ரோர்ஸ், நெல்லியடி), சுதர்சினி (இராமநாதன் கல்லூரி பல்கலைக்கழக மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வி.திரிஷாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் அவரது இல்லத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முள்ளி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*வரணி வடக்கு ,*
*வரணி* (சி-28203)

தகவல்:
சுதர்சன்
*(மகன்)*

# சுழிபுரம்-பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

## சுபானு வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம்

முருகன் அடியார்களே!

நிகழும் சுபானு வருஷம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் (03-06-2003) செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு கொடியேற்றம் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரு தினங்களுக்கு உற்சவம் நடைபெறும்.

**உற்சவ விவரம்**

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | - **03.06.2003** | செவ்வாய் | காலை 10 மணி |
| வேட்டைத் திருவிழா | - **12.06.2003** | வியாழன் | பகல் 12 மணி |
| தேர்த்திருவிழா | - **13.06.2003** | வெள்ளி | பகல் 12 மணி |
| தீர்த்தத் திருவிழா | - **14.06.2003** | சனி | காலை 10 மணி |
| சங்காபிஷேகம் | - **20.06.2003** | வெள்ளி | காலை 9 மணி |

தினமும் காலை 7 மணி முதலும் மாலை 4 மணி முதலும் உற்சவம் ஆரம்பமாகும்

**அடியார்கள் வருக ! திருவருள் பெறுக!**

ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில்,
தர்மகர்த்தா சபை. (18671)

**மு.பாலகுருசாமி சர்மா**
ஆலய அர்ச்சகர்.


# ENGLISH SPOKEN AND GRAMMAR

புதிய பிரிவு

திங்கள், புதன்

**By:BRITTO**

இடம் :மாணிப்பாய் கனகசபை வீதி, "ஓம் முருகா"இல்லம்

ஆரம்பம்:04.06.2003

நேரம் : காலை 10 மணி

(C-28205) (ப.நே.)

**உடன் தேவை**

பில் கிளாக்
45 வயதிற்கு மேற்பட்டோா
**சரஸ்வதி விலாஸ்**
195-57, K.K.S.றோட்,
யாழ்ப்பாணம்.
(18676)

**நாகம்ஸ் சுன்னாகம்**

சத்தியராஜ், சீதா, தலைவாசல் விஜய், விஜுச்சக்கரவர்த்தி நடித்த

**மாறன்** (ரீலீஸ்)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு விசேடகாட்சி 7.00(பு.நே)
(18613)

**லிபேட்டி** அச்சுவேலி



விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமனி, செந்தில் நடித்த

**சொக்கத்தங்கம்**

11.00, 3.00, 7.00 (பு.நே.) (ரீலீஸ்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

கமல், மாதவன் மற்றும் பலர் நடிப்பில்

**அன்பே சிவம்** (ரீலீஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
THE ROCK THE SCORPION KING
(C/28201)

**ராஜா** யாழ்ப்பாணம்

மூன்றாவது வாரம்
விஜய், மீராஜஸ்மின், கருணாஸ்



**புதிய கீதை**

காட்சிகள் :10.30, 2.30, 6.30,
சனி, ஞாயிறு 10.30, 2.30, 6.30, 9.30
(C27626)

**லஷ்சுமி சினிமா** இணுவில்

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா. நாகேஸ். வி.கே.இராமசாமி நடித்த

**இரகசியப் போலீஸ் 115** (ரீலீஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(18672)

# SHARP ஜப்பானியத் தொழினுட்பம் இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

be sharp



- உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
- யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப் பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
- நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics Live it up

Browns Group of Companies

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமார் கொலை தொடர்பான மர்மத்தை கூறவிருந்த சமயம் 'சமன்' சுட்டுக்கொலை!

கொழும்பு,ஜூலை2

பாதாள உலகக் கும்பல் உறுப்பினர் 'மொறட்டுவ சமன்' அண்மையில் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பான மர்மத்தை சட்டத்தரணி ஒருவரிடம் ஒப்புவிக்கவிருந்தார் என்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குமார் பொன்னம்பலம் படுகொலையுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் என்று கருதப்படும் 'மொறட்டுவ சமன்' அண்மையில் குமாரின் மகனான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் - இன்னொருவர் ஊடாக குமார் கொலை தொடர்பான முழு விவரத்தையும் கூறவிரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

அப்போது "எனது தந்தையைக் கொலை செய்வதற்கு உமக்கு உத்தரவு இட்டது யார்?" என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேட்டதற்கு 'கடந்த அரசின் உயர்மட்டம்' என்று மொறட்டுவ சமன் பதிலளித்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை நேரில் சந்தித்து அவை பற்றியெல்லாம் விரிவாகக் கூறவிரும்புவதாகவும் -

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இப்படியான கொந்தராத்துக் கொலைகளை ஏவிவிட்டவர்கள் தொடர்பான விவரங்களைத் தான் வெளிப்படுத்துவதாகவும் -

தற்போது தனது உயிருக்கும் பயங்கர அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் எந்நேரமும் தான் கொல்லப்படலாம என்றும் -

மொறட்டுவ சமன் கூறியிருக்கிறார்.

அதன் பின்னர் இதுதொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆயத்தமாகவிருந்த வேளையிலேயே மொறட்டுவ சமன் கடந்த மே 18 ஆம் திகதி இனந்தெரியாதோரால் பாணந்துறையில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுமார் 3 மாதங்களுக்கு முன்னர் மாலபேயில் வைத்து சமன்மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்ட போது அவர் காயங்களுடன் தப்பி விட்டார்.

கடந்த காலங்களில் கொந்தராத்துக் கொலைகளில் ஈடுபட்டவர்களுக்கு வலை விரிக்கும் நோக்குடனேயே சமன கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. (ஐ)

## நகரில் விபத்துக்கள் அதிகரிப்பு
# வீதி ஒழுங்குகளைப் பேண பொலீஸார் தீவிர நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்2

அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்திருப்பதாக யாழ். பொலீஸ் நிலைய பதிவேடுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு வருடத்தில் யாழ். பொலீஸ் நிலையப் பரப்புக்குள் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இந்த விபத்துக்களில் சிக்கி சுமார் பத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இது தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலைய போக்குவரத்துப்பிரிவு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் ஏ-9 வீதி திறக்கப்பட்டதை தொடர்ந்து தென்னிலங்கையில் இருந்து ஏராளமான வாகனங்கள் குடாநாட்டுக்குள் வரத்தொடங்கியதும் விபத்துக்களுக்கு ஒரு காரணமாகும்.

உரிய முறையில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறாத பலரும் வாகனங்களைச்செலுத்துவதும் இந்த விபத்து அதிகரிப்புக்கு மற்றொரு காரணமாகும்.அத்துடன், வாகன ஓட்டுநர்கள் மற்றும் ஏனைய பொதுமக்கள் பெரும்பாலானோர் போக்குவரத்து ஒழுங்குகளை உரிய முறையில் கடைப்பிடிக்கத் தவறுகின்றனர். இதுவும் விபத்துக்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும்.

தற்பொழுது நகரில் போக்குவரத்து விதிகளை உரிய முறையில் கடைப்பிடிக்காதோர் மீது பொலீஸார் கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

எனவே, இனி வருங்காலங்களில் விபத்துக்கள் குறைக்கப்பட்டுவிடும் என நம்புகின்றோம் - என்றார். (எ-4)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும் எனவும் கூறியிருக்கிறார்.

இலங்கையின் தென்பகுதிக்கு 'மிகப்பெருந்தொகை' நிதிக்கு உறுதியளிக்கப்படும் எனவும் - வடக்கு, கிழக்கிற்கு குறிப்பிடத்தக்க நிதியுதவி வரையறுக்கப்பட்டுள்ளது எனவும் - டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகளுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு தனது மக்களுக்கு விடுதலைப் புலிகள் உதவுவதற்கான ஒரு வாய்ப்பு எனவும் - அகாஷி கூறியிருக்கிறார். (ஐ)

## யாழ்.குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தலைமையகத்தால் விசேடமாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

கடந்த கால யுத்தத்தால் குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்காகப் பலதரப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

குடாநாட்டில் உள்ள 40 ஆயிரம் துருப்புக்களை 10 ஆயிரம் துருப்புக்களாகக் குறைத்து - அங்கு பொலீஸ நிர்வாகத்தை ஸ்திரப்படுத்தியும் - பாதுகாப்பு வலயங்களை சுருக்கியும் -

மக்களின் மீள்குடியமர்வு மற்றும் இயல்பு வாழ்க்கைக்கு உதவவிருக்கின்றோம்.

இதற்கான அடிப்படைப் பணிகளை ஆரம்பித்து விட்டோம்.

மக்களின் வீடுகளில் உள்ள படையினரை விலக்கி, சொந்தக்காரர்களிடம் வீடுகளைக் கையளித்து வருகின்றோம்.

மக்களிடம் இருந்து விவரங்களைப் பெற்று அவர்கள் மீளக் குடியமர வசதி செய்து கொடுக்கின்றோம்.

தனங்கிளப்புப் பகுதியில் உள்ள ஐந்நூறு ஏக்கர் விவசாயக் காணிகளையும் அரியாலைப் பகுதியில் ரயில்வே பாதைக்கும் கண்டி வீதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் உள்ள சுமார் முந்நூறு வீடுகளையும் உரியவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

குருநகர் இறங்குதுறைப் பகுதியில் படையினர் வசம் உள்ள வீடுகளும் உரியவர்களிடம் மீளக் கையளிக்கப்படும்.

இது தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விசேட அறிக்கை ஒன்றை இன்று யாழ்ப்பாணம் வரும் காணி அமைச்சர் ராஜித சேனரத்னவிடம் கையளிக்க விருக்கின்றேன். இந்த விடயங்களை அவரும் கையாள்வார்.

தென்மராட்சியில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்களில் அவற்றை அகற்றும் பணிகளை மேற்கொண்டுவருகிறோம். அது முடிந்ததும் அந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியமர்த்தப்படுவர் - என்றார்.

## புலிகளுக்கு விளக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த மூன்று தினங்களாக ஆராய்ந்து வருகிறார்.

பிரதமரின் யோசனைகளிலுள்ள குறைபாடுகளைப் புலிகள் சுட்டிக்காட்டியுள்ள போதிலும் பேச்சுக்கான கதவை அவர்கள் இன்னமும் மூடாதிருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி டோக்கியோ மாநாட்டில் அவர்களை பங்குபெறச் செய்யவே பிரதமர் இந்த விளக்கக் கடிதத்தை அனுப்பவிருக்கின்றார்.

புலிகளின் பதில் கடிதம் குறித்து வெள்ளி மாலையே ஆராய்ந்த பிரதமர், சனிக்கிழமையும் தொடர்ந்து ஆராய்ந்தார். நேற்றும் ஆறு சிரேஷ்ட அமைச்சர்களுடனும் உயர் அதிகாரிகளுடனும் பிரதமர் கூடி ஆராய்ந்தார் என அறியப்படுகிறது.

அரசின் அபிவிருத்திக் கவுன்சில் யோசனை பிரதமரின் கடிதத்தில் சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததால் அந்த யோசனையின் முழு விவரங்களையும் விடுதலைப் புலிகள் அறிந்து கொள்ள வழியிருக்கவில்லை என்று அரசு உணருகின்றது. இதனாலேயே அந்த யோசனையை விவரித்து, விளக்கக் கடிதம் ஒன்றைப் புலிகளுக்கு பிரதமர் அனுப்பவிருக்கிறார்.

கொழும்புக்கு வெளியே சென்றிருந்த அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜப்பான் சென்றிருந்த பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் அவசரமாக கொழும்பு திரும்பி பிரதமருடனான ஆலோசனையில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள சட்டவலுவும் அதிகாரமும் கொண்ட ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுதலைப் புலிகள் முன்வைத்திருப்பது தெரிந்ததே. (ஐ-3)

## இரட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயந்திரம் மாத்திரம் பூட்டிக் கொண்டு செல்லலாம். இரண்டு இயந்திரங்களைப் பூட்டிச் செல்லக் கூடாது எனப் படையினர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்துள்ளது.

ஏனைய இடங்களைப் போல வல வெட்டித்துறை, ஆதிகோவிலடி கடற் பகுதியிலும் இரட்டை இயந்திரப் படகுகளில் சென்று தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று மீனவர்கள் தரப்பில் கேட்கப்பட்டிருக்கிறது. (ஐ-173)

## வல்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாமலும் வர்த்தகர்கள் தங்கள் கடைகளைப் பூட்டியும் இன்றைய மறியல் போராட்டத்தில் பங்குகொள்வர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொது அமைப்புக்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன இணைந்து இந்த மறியல் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. (ஐ-3-173-70)

## சு.க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இவ்விடயம் தவிர்க்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.முன்னணி அரசாங்கத்தை ஜனாதிபதி கலைத்தால் ஆட்சியமைப்புக்கு ஏதுவாகவே சு.க. - ஜே.வி.பி. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுமெனவும் தெரியவருகிறது.

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தன் தலைமையில் இக் கூட்டம் இடம்பெறும்.

விடுதலைப் புலிகளின் யோசனைக்கு பதிலாக அரசு முன்வைத்த கூட்டமைப்பை புலிகள் நிராகரித்த காரணத்தை சர்வதேச சமூகத்துக்கு தெரியப் படுத்தும் வகையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் ஆராயப்பட விருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் உட்பட வேறுபல விடயங்கள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்படும்

இதேவேளை -

தற்போதைய நிலைமை தொடர்பாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றனர். (ஐ-3-12)


>>>>> இன்று முதல் <<<<<

வல்வெட்டியில்... தூரி வீதியில...

!இணைய சேவைப் பங்கா!

எமது நிறுவன மீள் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியானதையடுத்து கடந்த சில நாள்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த எமது சேவைகள் யாவும் இன்று முதல் புதிய பரிணாமத்துடன் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

"உங்களின் எதிர்பார்க்கைக்குரிய மேலும் ஓர் விளம்பரம் நாளைய உதயனில் காணத் தவறாதீர்கள்"

நிர்வாகத்தினர்.



MINI INFOTEL JAFFNA

mini INFOTEL LANKA 2003

A mini Infotel will be held for the first time in the Jaffna peninsula from the 27th to the 29th of June 2003 at the Jaffna Central College.

Infotel is the nation's premiere ICT show held once in two years in Colombo with Mini Infotel Exhibitions presented at specified locations.

Exhibitors are invited to book stall space immediately with the Infotel Secretariat to avoid disappointment.

**The Infotel Secretariat**
#51, Sri Marcus Fernando Mawatha, Colombo 07
Tel: 01-665261 / 074-713822 Fax: 074-713821
E-mail: Infotel@srilanka.net

**Infotel Regional Office**
C/o Institute of Informatics Studies
#68 (100) Clock Tower Rd., Jaffna

*Forging a new Jaffna with ICT*



ஈசன் கல்வி நிலையம்

A/L 2004

மின்காந்தத் தூண்டல்
WED.,THU.: 3.30 p.m.
திரு. குமரன் (B.Sc.)
ஆரம்பம்:04.06.2003 (WED.)
NOTE: இலத்திரனியல் வகுப்பு
SAT.,SUN.:5.00 p.m.
நடைபெறுகின்றன.
(18613)



SPOKEN ENGLISH WITH GRAMMAR

LECTURES BY
MR.M.A.HARI

- 2ஆவது புதிய பிரிவு ஆரம்பம். 3.06.2003 செவ்வாய் மாலை 4மணி.

Tues day
Thurs day } 4p.m.-5p.m.

- அனுமதிக்கு முந்துங்கள்.

DIRECTOR,
HARY 'S INST ITUTE
இல. 546, கஸ்தூரியார் வீதி,
(யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (18648)



இறை அனுபவம் பெற மீண்டும் ஓர் அழைப்பு!

இந்தியா போட்டா ஆச்சிரம இறைதியான இல்லத்திலிருந்து வருகை தரும்
அருட் தந்தை சேவியர் அருள்ராஜ்
அவர்களால் நடத்தப்படும்.

இறை தியான வழிபாடுகள்

- ஜூன் 5, 6, 7ஆம் திகதிகளில் காலை 9.30 - 1 மணிவரை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில்
- ஜூன் 7 இரவு 7மணிமுதல் அதிகாலை வரை புனித மாட்டீனார் குரு மடத்தில்

தூய ஆவி திருவிழிப்பு

- ஜூன் 14, 15 - மாட்டீனார் குரு மடத்தில் - குருத்துவ மாணவர்களுக்கு
- ஜூன் 16, 17, 18, 19ஆம் திகதிகளில் ஆயர் இல்லத்தில் குருக்கள், துறவிகள், கன்னியர்களுக்கு
- ஜூன் 20, 21, 22ஆம் திகதிகளில் - நெடுந்தீவில்
- ஜூன் 23, 24, 25 - கிளி. / முல்லை. மறைக்கோட்டத்தில்
- பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய நவநாள் மறையுரைகளும் மேற்படி குருவானரால் நிகழ்த்தப்படும்.
- இவை தவிர இளைஞர், பெற்றோர், சிறுவர்களுக்கான சிறப்பு நிகழ்வுகள்.

"தூய ஆவியின் செயற்பாட்டை அணைக்கவேண்டாம"

ஆயர் இல்லம். (18617) இறை தியான குழுவினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org